

அர்ச்சுனா
கல்வி — முயற்சி — பெருவாழ்வு
விலை ரூபா-5/=
சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்
ஜூலை-ஆகஸ்ட்-'89

# மில்க்வைற்

## சவர்க்காரத் தொழிலகம்

" திருக்கோயிலைத் தினமும் வழிபடுங்கள்,
திருமுறையைத் தினமும் ஓதுங்கள்,"

25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி பஞ்சபுராணத்திரட்டுப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

525/2, காங்கேசன்துறை வீதி,
த.பெ.இல. 77,
யாழ்ப்பாணம்.

"மில்க்வைற்"

தரமான கலர்ப்படப்பிரதிகள்

★ அதிகுறைந்த கட்டணத்தில்

★ மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச்சுருள் கழுவுதல்
முற்றிலும் இலவசம்

★ நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில் பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்

ஷப்ருவை நாடுங்கள்

ஷப்ரு நிதி நிறுவனம்
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22073




# அர்ச்சுனை

கல்வி — முயற்சி — பெருவாழ்வு

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்.

ஜூலை 1989

தனு: 2

கணை: 1




## மலரும் உள்ளங்களே!

உங்களுக்கு நண்பர்கள் உண்டல்லவா? யார் நல்ல நண்பர்கள்?

படிப்பில், விளையாட்டில், வழிபாட்டில் உங்களுடன் கூடி ஒத்துழைப்பவர்கள் நண்பர்கள்.

இன்பத்திலும், துன்பத்திலும் பங்கு பெறுபவர்கள் நல்ல நண்பர்கள்.

உடைக்கு இன்னொரு பெயர் உடுக்கை.

ஒருவனின் உடை நழுவுகிறது.

இடையின் கஷ்டத்தைக் காண்கிறது கை.

விரைந்து சென்று ஆடையைப் பற்றிக் கொள்கிறது.

இடை உதவி எதுவும் நாடவில்லை.

கையோ கஷ்டத்தைக் கண்டதுமே உதவிக்குச் செல்கிறது.

அதுவும் விரைந்து செல்கிறது, இந்தக் கை.

அது “உடுக்கை இழந்தவன் கை.”

துன்பத்துக்கு மறுபெயர் இடுக்கண்.

ஒருவருக்குத் துன்பம் நேர்ந்தால், அதை நீக்குவது நட்பு.

அதுவும் உடுக்கை இழந்தவன் கை போல் உதவ வேண்டும்.

அதுவே உதவும் கரம்.

அப்படி உதவி செய்வது நட்பு.

அவனே நல்ல நண்பன்.

நண்பர்களின் துன்பம் கண்டு துடிக்கிறீர்களா?.

அவர்களுக்கு ஓடிச்சென்று உதவி செய்கிறீர்களா?


அப்படியானால் நீங்கள் நல்ல நண்பர்கள்.

இதுவே வள்ளுவர் காட்டும் நட்பு.

அவர் பாடிய குறளைப் பாருங்கள்:

உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

# கிரகாம் ஹிக் — டொன் பிராட்மன்



வை. ஜெயந்தன்

கிரகாம் ஹிக் 1991 இல் தான் இங்கிலாந்து அணிக்கு விளையாடத் தகுதியுடையவரானார். இங்கிலாந்து முதல் தர ஆட்டங்களில் மிகவும் பரபரப்பாகப் பேசப்படுபவர். 23 வயதுடைய கிரகாம் ஹிக் 1988 இங்கிலாந்து சீசனில் 'மே' மாதத்திற்கு முதல் 1000 ஓட்டங்களைப் பெற்ற வீரர். இதில் ஒருதடவை அவர் 400 ஓட்டங்களுக்கு மேல் ஒரு இனிங்ஸைப் பெற்றுள்ளார். தனது கிரிக்கட் வரலாற்றில் இதுவரை கிட்டத்தட்ட 11000 ஓட்டங்களையும் 40 சதங்களையும் பெற்றுள்ளார். இவரைப் பலரும் அவுஸ்திரேலியாவின் டொன் பிராட்மனுடன் ஒப்பிடுவதுண்டு. பிராட்மன் தனது கிரிக்கட் வரலாற்றில் 338 இனிங்ஸில் 28,067 ஓட்டங்களையும் 117 சதங்களையும் பெற்றுள்ளார். இவரது சகல ஆட்டங்களின் சராசரி 95.14 டெஸ்ட் ஆட்டங்களில் சராசரி 99.96 ஆனால் ஹிக்கினுடைய சராசரி 61.63. இது வரை ஹிக் 196 இனிங்ஸ் விளையாடியுள்ளார். பிராட்மனும் 196 இனிங்ஸ் விளையாடியபோது இருவருடைய பெறுபேறுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால்

இங்குள்ள பெறுபேறுகள் ஓரளவு பிராட்மனுக்குச் சாதகமாகவே இருக்கின்றன. பிராட்மனுடன் ஒப்பிடக்கூடிய ஒரு சிலர் லென்ஹட்டன், கிரேக்சப்பல், வலிஹமண்ட், ஜோர்ஜ் ஹெட்லி, விவ்றிச்சேர்ட்ஸ், சுனில் கவாஸ்கர்.

| | இனிங்ஸ் | நொட் அவுட் | ஓட்டங்கள் | அதி கூடிய ஓட்டங்கள் | சராசரி | சதங்கள் |
|---|---|---|---|---|---|---|
| பிராட்மன் | 196 | 23 | 15944 | 452★ | 92·16 | 58 |
| ஹிக் | 196 | 19 | 10909 | 405★ | 61·63 | 40 |

★ நொட் அவுட்

## துணுக்கு

● சின்னஞ்சிறு சிறுவன் சிங்கத்தை அடக்குகின்றான். எங்கு? இங்கல்ல. 'பெர்ரி பிரதர்ஸ் சேக்கஸில்' இரண்டு வயதுடைய 'மிட்ச்பெரி' என்ற சிறுவனே சிங்கத்தை அடக்கும் சாகசங்களை சேக்கஸில் செய்கின்றான். சிங்கத்தை அடக்கும் சிறுவன் 'மிட்பெரி' ஒருவன்தான் உலகில் உள்ளான் எனப் பல நாடுகள் கூறுகின்றன.

# விழுதுகள்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்
ஆல மரத்தின் விழுதுகளும்
பாயிரம் பாடியே தாங்கிநிற்கும்
பான்மையைப் பாருங்கள் செல்வங்களே!

அன்னையுந் தந்தையும் எமைப்பெற்று
அவனியில் வளர்த்துமே மகிழ்ந்திடுவார்
பொன்னையும் பொழுதையும் எமக்காக்கி
பூமியில் கஷ்டத்தை ஏற்றிடுவார்!

விழுதுகள் போன்றநற் குழந்தைகளே
வீறுள்ள மக்களாய்த் தாங்கிடுவீர்
கழுதைகள் போன்றெம்மை சுமந்தவரை
காதலாய்க் காத்துமே போற்றிடுவீர்!

பிள்ளைகள் நீங்களும் பெரியவராய்
பின்னரும் குழந்தைகள் பெற்றிடுவீர்!
கிள்ளைகள் போலும்மை வளர்த்தவரை
கீழ்மையில் தள்ளிடல் பேதைமையே!

கண்களைப் போலும்மை காத்தவரை
கருவிலே சுமந்துமே வளர்த்தவரை
எண்களை எழுத்தினை தந்தவரை
என்றென்றும் போற்றியே வாழ்ந்திடுவீர்!

இன்றைய குழந்தைகள் எல்லாரும்
நாளைய பெற்றோரே எண்ணிடுவீர்!
இன்றைய பிள்ளைகள் எல்லாரும்
ஈழத்தின் செல்வங்கள் உன்னிடுவீர்.!

சிங்கையாழியான்

# உலக விக்கட்காப்பாளர்

பாலன்



உலகின் தலைசிறந்த விக்கட்காப்பாளர் யாராக இருக்கும். அடடே கிரிக்கட்டில் பந்து வீச்சாளரையும். துடுப்பெடுத்தாடுபவரையும் அதிகமாக கவனித்ததில் விக்கட்காப்பாளரை மறந்துவிட்டோமே? எனப்பலர் கவலைப்படு வீர்கள். சரி சரி...

உலகின் தலைசிறந்த விக்கட் காப்பாள ரைப் பார்ப்போம்.

'பீற்றர் ஜெர்ரீலிரோய்டூஜோன்' இவரே உலகின் தலைசிறந்த விக்கட் காப்பாளராகத் திகழ்கின்றார்.

மேமாதம் 28ம்திகதி 1956 ஆம் ஆண்டில் ஜமேக்காவின் கிங்ஸ்டனில் பிறந்த 'டூஜோன்' மேற்கிந்திய அணியில் இடம்பெறுகின்றார்.

நியூசிலாந்திற்கு எதிராக 7 டெஸ்களில் ஆடி 300 ஓட்டங்களை எடுத்த இவரால் 77 ஓட்டங்களையே அதிகபட்சமாக எடுக்க முடிந்தது. 3 தடவை 50ஓட்டங்களை எடுத்தார்.

பாகிஸ்தானிற்கு எதிராக 6 டெஸ்களில் ஆடி 212 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்சம் 106 ஓட்டங்களாகும்.

இந்தியாவுடன் 17 டெஸ்களில் ஆடி 801 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்சமாக ஒரு தடவை 110 ஓட்டங்களையும் 4 தடவை 50 ஓட்டங்களையும் எடுத்தார்.

தனது முதல் 1000 ஓட்டங்களை 16வது டெஸ்டில் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக 'போர்ட் ஒப்ஸ்பெயினில்' ஆடிய போது பூர்த்தி செய்தார். ஆண்டு 1983

1982ல் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக தன் கிரிக்கட் பயணத்தை ஆரம்பித்து 1989ல் இந்தியாவுடன் கடந்த மாதத்தில் முடிந்த டெஸ்ட் வரை ஆடி 2880 ஓட்டங்களை சேகரித்துள்ளார். 139 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுத்துள்ளார். 5 தடவை செஞ்சரிகளும் 14 தடவை அரை செஞ்சரிகளும் எடுத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு எதிராக 18 ஆட்டங்களில் ஆடி 967 ஓட்டங்களை சேர்த்தார். அதிகபட்சமாக 139 ஓட்டங்களை பெற்ற இதில் 2 செஞ்சரிகளும் 2 ஐம்பதுகளும் அடங்கும்.

இங்கிலாந்துடன் 14 டெஸ்களில் ஆடி 600 ஓட்டங்களை சேர்த்த இதில் 101 ஓட்டமே அதிகபட்சமாக இருந்தது. ஒருதடவை செஞ்சரியும் 5தடவை அரை செஞ்சரியையும் அடித்தார்.

அடுத்த 2000 ஓட்டங்களை 1986ல் நியூசிலாந்திற்கு எதிராக ஆடியபோது தனது 43வது டெஸ்டில் பூர்த்தி செய்தார். சரி இனி டூஜோனின் தனித்துவ திறமையான விக்கட் காப்பிற்கு வருவோமா?

உலகின் தலைசிறந்த விக்கட் காப்பாளராக இருந்தவர்கள்...

அவுஸ்திரேலியாவின் 'டொட்னி மார்ஸ்' இவர் 96 டெஸ்களில் ஆடி 3633 ஓட்டங்களை சேர்த்தார். இவர் எடுத்த விக்டிமீஸ் 355

இங்கிலாந்தின் 'அலன்நொட்' 95 டெஸ்ட்களில் ஆடி 4389ஓட்டங்களை எடுத்து 269 victims ஐ எடுத்தார்.

இங்கிலாந்தின்' குட்றிஈவன்ஸ்' 91டெஸ்ட்களில் ஆடி 2439 ஓட்டங்களை சேகரித்து 219 victimsஐ எடுத்தார்.



## டுஜோன்

இவர்களது சாதனே யாரும் பாதிகூட எட்டவில்லை. ஆனுல் 'டுஜோன்' இவர்களின் வரிசையில் சேரப்போகின்ருர்.

1982 முதல் 1989 மே வரை 62 டெஸ்ட்க ளில் ஆடி 195 காட்ச்களை பிடித்துள்ளார்.

இவரால் முதல் முதல் ஆட்டமிழந்தவர் 1982 இல் தனது 2வது டெஸ்டில் அவுஸ்திரே லியாவிற்கு எதிராக ஆடுகையில் புரூஸ் லாய்ட் என்ற வீரர்.

50வது காட்ச்சை 17வது டெஸ்டில் அவுஸ் திரேலியா வீரர் 'ஸ்டீவ் ஸிமித்' அடித்த பந்தை பிடித்ததன் மூலம் எட்டினுர். ஆண்டு 1983-84

100 வது காட்சி 30வது டெஸ்டில் நியூசி லாந்து, அணியுடன் 1984 ல் போட் ஒப்ஸ்பெ யினில் ஆடுகையில் 'ஜெரெமி கோனி' அடித்த பந்தை பிடித்ததன் மூலம் எட்டினுர்.

தனது 150வது காட்சை 1987ல் இந்தி யாவிற்கு எதிராக சென்னேயில் ஆடுகையில் 'மோகிந்தர் அமர்நாத்' அடித்தபந்தை பிடித் ததன் மூலம் எட்டினுர்.

200 வது காட்ச்சை இனிப் பிடிப்பார். இதுவரை அவுஸ்திரேலியாவிற்கு எதிராக 18 டெஸ்ட்களில் ஆக 62 காட்சை பிடித்தார்.

இங்கிலாந்திற்கு எதிராக 18 டெஸ்ட்க களில் ஆடி 52 காட்ச்களை பிடித்தார். நியு சிலாந்திற்கு எதிராக 7 டெஸ்களில் ஆடி 20 காட்ச்களை பிடித்தார்.

பாகிஸ்தானிற்கு எதிராக 6 டெஸ்ட்களில் 11 காட்ஸ்சுகளேயும் இந்தியாவிற்கு எதிராக ஆடிய 17 டெஸ்ட்களில் 50 காட்ச்களின் எண்ணிக்கையை 195 ஆக்கிக்கொண்டார் டுஜோன்.

அவரது 200 வது காட்சை எனக்கும் கூறுவீர்களா?

★ ★ ★

# கிரேக்க வீரன் கெரக்கிலிஸ்

— அபிராமி வரதன் —



(பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் புராதன கிரேக்க நாட்டில் பல கதைகள் உலாவின. கிரேக்க நாட்டு வீரர்களில் தலைசிறந்தவன் கெரக்கில்ஸ். பல வீரதீரச் செயல்களைப் புரிந்தவர். இறந்தபின் அவன் அந்தநாட்டு மக்களால் கடவுளாகப் போற்றப்பட்டான். அவனுடைய கதை இதோ.)

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். அதேபோல் குழந்தைப் பருவத்தில், மண்விளையாட்டில் ஒருவரின் திறமை தெரியும்.

கெரக்கில்ஸ் கிரேக்க தேசத்து வீரன். அவனுடைய சிறு பிராயத்தில் மக்கள் அவனது திறமைகளை உணர்ந்து கொண்டார்கள்.




ஒருநாள் சிறுவனாயிருக்கும் போது அவனுக்கருகே இரண்டு பாம்புகள் வந்தன. அவன்மீது பாய அப்பாம்புகள் ஆயத்தமாயின. உடனே அவன் இரண்டு பாம்புகளையும் இருகைகளால் கழுத்தில் பிடித்து அந்த இடத்திலேயே நசித்துக் கொன்றான். இதனால் இவனுடைய வீரம் பிரபல்யமடைந்தது.

விரைவில் இவன் வளர்ந்தான். உடல்பலத்திலும் வீரத்திலும் அவனுக்கு சவாலாக யாரும் இருக்கவில்லை. மிருகத்தோலையே உடையாக அணிந்தான். மரத்தினால் பலமான ஆயுதங்களைச் செய்தான்.

அவனது ஊரிலே மக்களையும் ஏனைய மிருகங்களையும் பயமுறுத்தி துன்புறுத்திய ஒரு சிங்கத்தைப் பற்றி அவன் கேள்விப்பட்டான். அச்சிங்கத்தின் தொல்லை காரணமாக அவ்வூர் மக்கள் குடிபெயர்ந்தார்கள். மக்கள் துயரையும் பயத்தையும் போக்க விரும்பினான் கெரக்கில்ஸ்.

இந்தச் சிங்கத்தை எப்படியும் அழித்து மக்களைக் காப்பாற்றுவேன்'' என்று கெரக்கில்ஸ் சபதமெடுத்தான்.

காட்டைநோக்கி நடந்தான் சிங்கத்தின் குகைக்குச் சென்றான். குகை



இருள் சூழ்ந்து காணப்பட்டது. பெரிய கற்களை தூக்கிவந்து அடுக்கி குகையின் ஒரு வாயில் புறத்தை அடைத்தான். மற்ற வாயிலால் சிங்கம் வெளியே வரும் வரை நீண்ட நேரமாகக் காத்திருந்தான்.

இறுதியில் சிங்கம் மாலைநேரத்தில் வெளியே வந்தது. சிங்கத்தைக் கண்டதும் அம்பெய்தான். ஆனால் அம்பு சிங்கத்தின் உடலில்பட்டு தெறித்தது. சிங்கத்திற்கு எந்த தீங்கும் நேரவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த சிங்கம் கெரக்கில்சை நோக்கி பாய்ந்தது. ஒரு கணப்பொழுதில் உடலைப்பதித்து சிங்கத்தின் பிடியில் அகப்படாமல் தப்பி தனது கையிலிருந்த மர ஆயுதத்தினால் சிங்கத்தை மாறிமாறி அடித்தான். கெரக்கில்சின் அடியின் வேகத்தை தாங்கமுடியாத சிங்கம் இறந்தது.

மக்களைப் பயமுறுத்திய அந்தச் சிங்கத்தின் உடலை நகரத்துக்கு இழுத்து வந்து மக்கள் காண வைத்தான். தமது கஷ்டத்தை போக்கியதற்காக கெரக்கில்சை அவர்கள் பாராட்டினார்கள்.

இதனால் கெரக்கில்சிற்கு ஏற்பட்ட மகிழ்ச்சி கொள்ளை. அவனது ஊர் மக்களின் துன்பம் தீர்ந்தது. பயம் தொலைந்தது. அவர்களுக்கு நிம்மதி கிடைத்தது. ஊரில் அமைதி நிலவியது.

இதனால் கெரக்கில்ஸ் மகிழ்ந்தான். மக்கள் மகிழ்ந்தனர். மக்கள் அவனைப் பாராட்டினர். ஏன் அவனை கடவுளாகவே போற்றினார்கள்.

(படம் நன்றி மீஷா)

# வியக்க வைக்கும் பறக்கும் தட்டு - 5

— ககாரின்

ஆண்டு 1986 நவம்பர் 17ந் திகதி எரிமலைகளை அதிகம்கொண்ட ஐஸ்லாந்து நாட்டின் ரெய்க்ஜாசக்கிலிருந்து அலாஸ்காவின் ஒங்கரஜ் என்ற இடத்தை நோக்கி ஒரு விமானம் புறப்பட்டது விமானத்தை செலுத்திக் கொண்டு விமானி கெஞ்ஜச தெரச்சி இருக்கின்ருர்.


திடீரென அவர் கண்களுக்கு விமானத்திற்கு நேராக சில தூரம் தள்ளி ஒளிப்புள்ளிகள் நகர்வது தெரிந்தது. அது அவரது விமானத்தைப் போன்ற வேருெரு விமானமா? அதுதான் இல்லை. விமானி ஒளியின் உயரத்திற்கு கீழிறங்கிப் பார்த்தார்.

விமானத்தை ஒரு சுற்றுச் சுற்றி திரும்பினுர் தெரச்சி. அதுதான் பறக்கும்தட்டு விமானம் எங்கெங்கு சென்றதோ அங்கெல்லாம் பின்தொடர்ந்து வந்ததாம் அவ்வேளை அதைப்பற்றி தகவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்துக்கொண்டிருந்தார் தெரச்சி.

அரைமணி நேரம் தொடர்ந்துவந்த பறக்கும்தட்டு சிறிதுசிறிதாக மறைந்துவிட்டதாம்.

தெரச்சி கண்ட பறக்கும் தட்டுபற்றிக் கேள்விப்பட்ட பிலிப். ஜே.கிளாஸ் என்ற விஞ்ஞானி ஒரு தகவலைக் கூறுகின்ருர்.

நமது விமானி தெரச்சி கண்டது பறக்கும் தட்டு இல்லை. அவர் பார்த்தது வியாழன்



அதன் தோற்றம் வெளிச்சத்தில் தெரிந்தது. அத்தோற்றத்தை விபரிக்கின்ருர் தெரச்சி. மேலும் கீழும் ஊதியும் அகன்ற தட்டையானதாகவும், மூன்று தட்டுப் போன்று தெரிந்ததாம். அம்மூன்று தட்டுகளும் வெவ்வேறு அளவுகளாகும். தட்டுகளிலிருந்து பலவர்ணங்கள் ஒளிர்ந்தன. குறிப்பாக சிவப்பும், மஞ்சளும், பச்சையும் தெளிவாகத் தெரிந்தனவாம்

கிரகம். நவம்பரில் வியாழன் மிகத் தெளிவாக இருக்கும். அதையே விமானி கண்டார் என்று கிளாஸ் கூறுகின்ருர்.

அப்போ அது ஏன் விமானத்தைத் தொடர்ந்து வந்தது? தரைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் யாவரும் காண்கின்ற பறக்கும் தட்டுகள் என்ற பொருள் கிரகமா? கிரகங்கள் நம்மைவிட அதிக தொலைவில் உள்ளன.

அவை நமக்கு அண்மையில் வரா. வஸ்துகளை தூவமாட்டா. அவை தனது பாதையில் சூரியனைச் சுற்றிக் கொண்டுதான் இருக்கும். இப்படி அறிவியல் அறிஞர்கள் இருபகுதிகளாகப் பிரிந்து வாதிட்டுக்கொள்கிறார்கள்.

திடீரென விமானத்தில் ஓர் நடுக்கம்.

விளக்குகள் மின்னின. ரேடியோ தொடர்பு அறுந்தது. ப்ரெடரிக் வலென்டிச் செய்வதறியாது ஒருகணம் திடுக்குற்றார்.

அடுத்த நிமிடம் விமானம் சீரிற்குவந்தது. ஆம் இது அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் 1972 ஆம் ஆண்டு நடைபெற்றது.

விமானி வலென்டிச் விமானத்தை ஓட்டிச் செல்கையில் தூரத்தே ஒளிர்வஸ்து ஒன்று தன்னைநோக்கி வருவதைக் கண்டார் மிகுந்த வேகத்துடன் பச்சை ஒளியைக் கவர்ந்தவாறு வந்த அது விமானத்தின் மேல் பல தடவைகள் சுற்றியது. அந்தவேளைதான் விமானத்தில் நடுக்கம், விளக்குகளின் அணைவு. ரேடியோ தகவல் தொடர்பு அதிர்வு.


ஆண்டு 1978. நியூசிலாந்திலிருந்து ஒரு சரக்கு விமானம் புறப்பட்டது. அதில் மெல்பேர்ண் தொலைக்காட்சி நிலைய அதிகாரிகள்.

செல்லும் வழியில் விமானத்தில் விளக்குகள் அணைந்தன. தகவல் தொடர்பு அறுந்தது. வெளியே கண்ணைக் கூசவைக்கும் ஒளியை வாரி இறைதவாறு நீள்வட்டக்கலம் வேகமாக விமானத்தைக் கடந்து சென்றது.

இதுவும் வானாய்வு நிலையத்தில் பதிவானது. ஆனால் இதுபற்றி எதுவும் அறியப்படவில்லை. ஆனால் தொடர்ந்து 10 நாட்களாக சரக்கு விமானங்கள் இந்த வஸ்துவைக் கண்டனவாம்.

இதனை ஆய்வு செய்ய ஒரு குழு சரக்கு விமானமொன்றில் ஏறிச் சென்றது. ஆனால் அவர்கள் கண்ணிற்கு எதுவும் தென்படவில்லை.

இது இவ்வாறு இருக்க ஓர் அறிஞர் இதனை சினிமா படம் எடுக்கும் பிலிமில் பதிவு செய்துவிட்டார்'



மேலும் இவர் கூறியது. இது மிகுந்த வேகத்துடன் இருண்ட டாஸ்மன் கடலுக்குள் சென்று மறைந்தது இந்தக் காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவிலும் அதனை அடுத்த நியூசிலாந்திலும் அதிக இடங்களில் இந்தப் பச்சைத் தட்டு தெரிந்ததாக பதிவு 'செய்யப்பட்டது. அவர்கள் அனேகர் அது கடலுக்குள் சென்று மறைவதையே கண்டனராம்.

அமெரிக்க கடற்படையில் இருந்த டாக்டர் புரூஸ்முகாப் ஒரு தொலைக்காட்சித் தகவல் படம் எடுத்துக் கொண்டிருக்கின்றார். அது வானியல் சம்பந்தமானது ஒளிப்பதிவாளர் 19 மில்லிமீற்றர் பிலிம் பூட்டிய கமெராவை இயக்குகின்றார்.

(33ஆம் பக்கம் பார்க்க)

# இருபத்தைந்து சத நாணயம்

பலாலி யாழ்ப்பாணம் இ.போ.ச. வந்தது. அதிகாலை நாலரை மணியிருக்கும் அந்த பஸ்ஸில் போனுற்றுன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கிளினிக்துண்டு எடுக்கலாம். இது இரு தசாப்தங்கட்கு முந்தியகதை பஸ்ஸிலே அந்த நோயாளி புன்னுலைக்கட்டுவனில் ஏறிக்கொண்டார்' திருநெல்வேலிச் சந்தை வியாபாரிகள்' கமக்காரருடன்; யாழ்தேவியைப் பிடிக்கும் (யாழ்ப்பாணத்தில்) உத்தியோகத்தரும் –இடநெருக்கடி– ஒருவாறு ஏறி நின்றுர். அவர் ஒரு கைபிடியைப் பிடித்துக் கொண்டு, பஸ் நகரத் தொடங்கியது.

டிக்கெட், டிக்கெட் என்று சத்தத்துடன் வந்தார் கொண்டெக்டர். புத்தகமும், கொப்பியும், பென்சிலுமாய். அந்த இருதய நோயாளியும் இரண்டு ரூபா நோட்டைக் கொடுத்தார். பஸ்சும் சுமார் ஒன்றரைமைல் போய்விட்டது. கொண்டக்ர்ட கண்டிப்பான குரலில் இது கசங்கிப் போயிற்று. வேறு காசு தா என்று சொல்லாமற் சொல்லும் பாணியிற் கடுகடுத்தார். விஷயத்தை விளக்கினுர். பிரயாணியான நோயாளி அவர் கேட்பதாயில்லை. அந்தக் கிளினிக்கை விட்டாற் பின் ஒரு மாதம் செல்லும். அதுவும் டேற் எடுக்க வேணும். மன்றுடினுர். கொண்டக்டரின் வாடிக்கையான பேச்சில் மாற்றமில்லை. பஸ்ஸில் இருந்த பிரயாணிகளை நயந்து கேட்டார். ஒரு புண்ணியவாளருக்கும் ஒரு இருபத்தைந்து சதத்தை எடுத்து விட மனம் வரவில்லை. இதற்கிடையில் பெல்சத்தம் கேட்டது. கொண்டக்டர் அவரை இடைவழியில் இறக்கிவிட்டார். பஸ்சும் உறுமிக்கொண்டு பிரியாவிடை சொல்லிற்று,

என்ன செய்வது எப்படியும் கிளினிக் போக வேண்டுமே சிறிதுவேளை சிந்தித்தார். பக்கத்திலே இருந்த வீட்டுக்குப் போய் தனக்கு நிகழ்ந்த துன்பமான சம்பவத்தைச் சொல்லி தனது 2 ரூபா நோட்டைக் கொடுத்து வேறு பணம் மாறிக் கொண்டு அடுத்து வந்த பஸ்சிற் போய் மருந்துமெடுத்துக் கொண்டு வீடு திரும்பினுர். வீட்டுக்கு வந்து பிள்ளைகளுக்கு நடந்த துன்பியல் நாடகத்தைச் சொல்லி நீங்களிப்படி வாழக்கூடாது. மற்றவர்கட்கு உதவி நடவுங்கள் என்று சொல்லிக் கொண்டார்,

இது நடந்து சில நாட்களில் அப்பெரியாருடைய மகள் பஸ்சிலே யாழ்ப்பாணம் போய்க் கொண்டிருந்தார். நல்ல வயதான ஒருவர் ஊரெழுவில் பஸ்சில் ஏறினுர். கொண்டக்டர் எங்கேயென்று கேட்டார். தம்பி திருநெல்வேலிச் சந்திக்கு ஒரு டிக்கெட் தாருங்கள் என்று அன்போடு சொல்லி 10 ரூபா நோட்டை நீட்டினுர் சில்லறையில்லை. ஏன் சில்லறையாகக் கொண்டு வாறதுக்கென்ன என்ற கடின பேச்சுடன் பெல்லையடித்து இறக்க முயன்றுர். பஸ்சில் இருந்த அந்தப் பிள்ளை 25 சதம் கொடுத்து அவர் பிரயாணஞ் செய்ய உதவினுர்' கொண்டக்டர் உனக்கேனிந்த அக்கறையென்று ஒரு நக்கலாகக் கேட்டார்.

---

**ஆழ்கடலான்**

---

அந்தப் பெண்பிள்ளையும் தனது அப்பாவுக்கு நிகழ்ந்த துர்ப்பாக்கியத்தைப் பக்கத்திலிருப்பவர்களுக்குச் சொல்வது போல் கொண்டக்டருக்குக் கேட்கும்படி சொன்னுர்' கொண்டக்டரின் முகத்தில் அசடு வழிந்தது. இதற்கிடையில் திருநெல்வேலியில் பலர் இறங்கினுர்கள். கமக்காரர், வியாபாரிகள் பொதிகளை இறக்க கிறிது நேரமான து அப்பெரியவர் அவசர அவசரமாக இறங்கி காசை மாற்றி அப்பிள்ளைக்கு 25 சதத்தைக் கொடுத்து விட்டு மெல்ல நன்றிப்பார்வையுடன் இறங்கியது தான் பஸ்சில் உள்ளவர்களெல்லாம் அந்தப் பெரியவரைப் பற்றியே கதைத்தார்கள்,

கண்டக்டரின் முகத்தில் அசடு வழிந்தது.

# சிறுவரும் மதமும்



செல்வி ச. சஜிதா
மகாஜனாக் கல்லூரி

ஒரு பெரிய ஜெட் விமானம் தரை இறங்குவதற்காக ஓடுபாதையில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு சிறிய புழு அதன் சில்லுகளுக்குள் அகப்படாது தப்பிக்கொண்டுவிட்டது. இவ்விரண்டிலும் உன்னதமானது எது? அச்சிறிய புழுத்தான். ஆச்சரியமாக இருக்கிறதா? ஆம் ஆச்சரியம் தான். விமானத்தைப் பொறுத்தவரையில் அது வெறும் ஜடம் தானாக இயங்க மாட்டாது. தன்னைப்போன்ற ஜெட்விமானங்களை அதனால் உற்பத்தி செய்யமாட்டாது. அதனை இயக்குவதற்கு ஒருவர் வேண்டும். ஆனால் இச்சிறிய புழுவோ, உயிர் உள்ளது. உணர்வு உள்ளது தன்னைப் போன்ற புழுக்களை இனப் பெருக்கும் ஆற்றல் உள்ளது. தன்னைப் பாதுகாத்துக்கொள்ளத் தெரிந்தது.

இந்த இரண்டிலும் வல்லமையும் ஆற்றலும் கூடிய புழுவைப் படைத்த ஒரு பரம் பொருள் உண்டு. ஜெட்விமானத்தைப் படைத்தவன் மனிதன். உன்னதமான புழுவைப் படைத்த பரம் பொருளை அறிவதற்கும் அப் பரம்பொருளின் ஆதரவைப் பெறுவதற்கும் இறுதியில் அப் பொருளின் திருவடியையே அடைந்து அழியாத பேரின்பப் பெருவாழ்வு பெறுவதற்கான வழிவகைகளைக் கூறுவதே மதமாகும். இந்தப் பரம்பொருளை அறிவதற்கு சாதாரண அறிவு படைத்த மனிதரால் முடியுமா? அதற்கு ஞானம் வேண்டும். ஞானத்திற்குப் பரம்பொருளின் திருவருள் வேண்டும். இப்படியான உன்னதமான பரம்பொருள் பற்றி சிறுவருக்கு நாம் அறிவுறுத்துவது இலேசான காரியம் இல்லை.

ஒரு மோட்டார் வாகனத்தின் இயந்திர வடிவமைப்பு அதன் உள்ளகத் தகன இயந்திரம் பற்றிய அறிவு, இவையெல்லாம்இல்லாத சாதாரண மனிதன் மோட்டார் வண்டியை ஓட்டவும், பிழைஏதும் ஏற்படின் திருத்தவும் செய்கிறான். இது மோட்டார் ஓட்டியின் செய்முறைப் பயிற்சியினால் ஏற்பட்ட ஒன்று. இதே போலவே மதக்கொள்கைகள், அநுட்டானங்கள், நெறிமுறைகள் என்பதை செய்முறையாகவே நடைமுறைப்படுத்தி வந்தால் சிறுவர் மனதில் எளிதில் பதிய வைத்துவிடலாம்.

சிறுவருக்கான மதம் எப்படியிருக்க வேண்டும்? அச்சிறுவனின் ஒழுக்கம், பண்பு, அச்சிறுவனின் சமூகக்கலாச்சாரம், மொழி பொதுவான நன்னெறி, சமூக மயமாக்கும் தன்மை இவற்றைப் போதித்து நாட்டின் நற்பிரஜை ஆக்குவதற்கான வழிவகைகளைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு மரத்தில் மலர் ஒன்று மலர்கிறது என்று கொள்வோம். அது தானாகவே கனியாகிவிடுமா? அது மலர்ந்த தன் நோக்கத்தை நிறைவேற்றிவிடுமா? இல்லை அதற்கு மகரந்தச் சேர்க்கை நடைபெற்று கருக்கட்டல் நிகழ வேண்டும். மகரந்தச் சேர்க்கை கூட தானாக நடந்துவிடுமா? இல்லவே இல்லை. அது காற்றினால் அல்லது வண்டுகளினாலேயே தான் ஏற்படும்? இதுபோலவே சிறுவர்களாகிய மலருக்கும் நல்லறிஞருமாகிய வண்டுகள் வேண்டும். அவர்களது போதனைகளாகிய மகரந்தத்தினால் சிறுவர் மனதில் மதக்கொள்கைகள் கருக்கொண்டு பரிணமிக்க வேண்டும் இவையெல்லாம் சரியான முறையிற் செய்யப்பட்டால் மட்டுமே மதநம்பிக்கையுள்ள சமுதாயச் சிறப்புடைய நற்பிரஜைகள் உருவாகமுடியும்.

சிறுவர்களுக்கு சுதந்திர உணர்வைத் தூண்டும் மத போதனைகளைக் கதைகளாக்கி அவனிடம் பயம், பீதி என்பவை தோன்றாமல் நம்மைக் காப்பாற்றும் ஒரு பரம் பொருள் உண்டு. அதனை வழிபட்டால் நம்மனதில் பயம், பீதி, ஏக்கம் எதுவுமின்றி சுதந்திரமாக வாழமுடியும்

(26 ஆம் பக்கம் பார்க்க)

**அன்புள்ள தம்பி தங்கைகளே!**

சிறுவர் இலக்கிய அறிஞர் மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்கள் தொடராக எழுதும் கவிதைபாடுவோம் பகுதியில் வெளியிடுவதற்கான கவிதைகளை நீங்கள் ஆர்வத்தோடு அனுப்பிவருவது கண்டு மகிழ்கிறோம்.

எமது நோக்கத்தை நிறைவுசெய்யும் வகையில் உங்கள் பாடல்கள் அமையவேண்டும்.

கவிதைபாடுவோம் 1 க்குரிய கவிதைகள் அந்தப் பகுதியில் உதாரணமாகத் தரப்பட்ட பாடல்களின் 'சின்னச் சின்னக் கவியெழுதி..., குயிலே குயிலே கூவாதே...' சந்தத்தில் அமையவேண்டும்.

இவ்வாறு எழுதுவதன்மூலம் நீங்கள் மரபுக் கவிதைகளைச் சிறப்பாக எழுதமுடியும். ஆகவே. இதனை மனதிற் கொண்டு இலக்கணம் அமையக் கவிதைகளை எழுதி அனுப்புங்கள். கீழேயுள்ள படிவத்தையும் கவிதையுடன் இணைத்து அனுப்ப மறந்துவிடாதீர்கள்.

— ஆசிரியர் —

## கவிதை பாடுவோம்

முழுப்பெயர்: செல்வன்/செல்வி:......................................................

கற்கும் பாடசாலை:......................................................

கற்கும் வகுப்பு:..................பிறந்த ஆண்டு:..................வயது:...............

சொந்த முகவரி:......................................................

......................................................

இணைக்கப்பட்டுள்ள கவிதை எனது சொந்த ஆக்கம். இதுவரை அச்சில் வெளிவரவில்லை இதனை எனக்காக வேறு யாரும் எழுதவில்லை.

.................................... ....................................

திகதி இளங்கவிஞர் ஒப்பம்

# கவிதை பாடுவோம்

## பிருந்தாவனக் குழலோசை

கோவே கோவே திகைக்காதே
கண்ணன் குழலை ஊதுகிறான்
அலையே அலையே மோதாதே
கண்ணன் குழலை ஊதுகிறான்.

பறவை பறவை பறக்காதே
கண்ணன் குழலை ஊதுகிறான்
மாதே மாதே மயங்காதே
கண்ணன் குழலை ஊதுகிறான்.

கண்ணன் பரப்பும் குழலோசை
மக்கள் மயங்கும் குழலோசை
மனதை அள்ளும் குழலோசை
பிருந்தா வனத்துக் குழலோசை.

தெல்லியூர் மு. விஜயராகவன்.

## நல்லவை கேட்டிடு!

நல்ல கருத்தை நான்பாட
நலமாய் அதனை நீகேளு
நல்லோன் என்றே வையகமும்
நாளும் உன்னைப் போற்றிடுமே'

அன்னை தந்தை தாள்பணிந்து
இறைவன் புகழை நீபாடு
அன்பால் பகையை நீவென்று
அறிவுப் பசியைத் தீர்த்திடுவாய்,

அடக்கத் துடனே இருந்திடுவாய்
அனைவ ரையும் 'மதித்திடுவாய்
மடமைத் தனத்தைப் போக்கிவிடு
மக்கள் தொண்டன் ஆகிவிடு,

செல்வன் ந. குகதாசன்.
சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

## அந்திப் பொழுது

அந்திப் பொழுதும் வந்ததுவே
மனதில் மகிழ்ச்சி பொங்கிடுதே
துள்ளிக் குதிக்கும் கன்றுகளும்
பாலைக் குடிக்கச் சென்றிடுமே.

ஆல யத்து மணியோடு
மந்தி ரங்கள் ஒலிசெய்யும்
அன்பு எங்கும் பரவிடவே
பாசம் பற்றிக் கொள்கிறதே

தி. பிரேமேந்திரதீசன்
தியாகராசா மகா வித்தியாலயம்.
காரைநகர்.

# தங்கத் தாத்தா தந்த தங்கப் பாடல்கள்

இரசிகமணி
கனக. செந்திநாதன்

ஆடிப்பிறப்பு ஈழத் தமிழர்க்கு முக்கியமான நாள். அதிலும் யாழ்ப்பாணத் தமிழர்கள் அதை விசேடமாகக் கொண்டாடுவார்கள். கூழ் காய்ச்சியும் கொழுக்கட்டை அவித்தும் குதூகலம் கொள்வார்கள்.

பாடசாலைப் பிள்ளைகளுக்கான கவிதைப் போட்டி ஒன்று நடைபெற்ற பொழுது (1935 இல்) நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களும் கலந்துகொண்டு சில பாடல்களை எழுதினார்கள். அப்பாடல்களே ஆடிப் பிறப்பு கத்தரி வெருளி என்பவை. இவை பாடசாலை மாணவரைக் கருத்திற் கொண்டு எழுதப்பட்டவை என்பதை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். இவை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மகாலிங்கசிவம் போன்ற இலக்கிய மேதைகளால் தங்கப் பதக்கம் பெறத் தகுதியானவை எனச் சிபார்சு செய்யப்பட்டவை.

## ஆடிப்பிறப்பு

ஆடிப்பிறப்புப் பாடலில் ஒரு விசேடம் என்னவென்றால் தேவையற்ற அடைமொழி ஒன்றுமின்றி குழந்தைகள் படிக்கக்கூடிய எளிய, இனிய பாடலாக, நல்ல சந்தத்தில் அமைந்திருப்பதுதான்; அது மாத்திரமல்ல, நாளைக்கு வரும் விடுதலை நாளைப்பற்றி முதல் நாள் குழந்தைகள் எண்ணி நாக்கைச் சப்புக்கொட்டுவதும் தான்.

**ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே.**

என்பதில் நாளை வருவதை எண்ணி மனக் கோட்டை கட்டித் துள்ளுவது தெரிகிறதல்லவா?

**பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாஉண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத்
துழாவுவாள்
மணக்க மணக்கவா யூறிடுமே.**



என்றும்

பல்லுக் கொழுக்கட்டை அம்மா
அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே



கூழ் குடிக்கும் குதூகலம்

என்றும் புலவர் பாடிய பாடலை நாம் பாடும்போது வாயூறுகிறது; நெஞ்சம் இனிக்கிறது.

## கத்தரிவெருளி

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று, மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல் வேலை பார்க்கும் வெருளியாரை உங்களில் பலர் கண்டிருக்கலாம். ஆனுல், அவரைக் 'கருப்' பொருளாக வைத்து, அவரது புறத் தோற்றத்தையும் அவரால் கமக்காரர் அடையும் நன்மையையும் வாழ்க்கைக்கு அவர் காட்டும் குறிக்கோளையும் புலவர் அவர்களாலே தான் பாடமுடியும். இதோ புலவர் வெருளியின் புற அழகைப் பாடுகிருர்:

தொட்டு முறுக்காத மீசை யைப்பார்
-கறைச்
சோகி போலே பெரும் பல்லைப் பார்
-கறைச்
சோகி போலே பெரும் பல்லைப் பார்.
கட்டிய கச்சையில் விட்டுச் சொருகிய
கட்டை உடைவாளின் தேசுபார்
-ஆகா
கட்டை உடைவாளின் தேசுபார்

இந்த வெருளியின் கோலத்தைக் கண்டு என்ன நடந்தது தெரியுமா?

பூட்டிய வில்லும் குறிவைத்த பாணமும்
பொல்லாத பார்வையும் கண்டதோ?
-உன்றன்
பொல்லாத பார்வையும் கண்டதோ?
வாட்டமில் லாப்பயிர் மேயவந்த பசு
வாலைக் கிளப்பிக்கொண் டோடுதே
-வெடி
வாலைக் கிளப்பிக்கொண் டோடுதே

பசு பயந்து ஓடும்போது கிளப்பும் வாலை, வெடிவால் என்று கிராமிய மொழியிலே சொல்லியிருக்கும் அழகு கோடி பொன் பெறும்... தாடி அறுந்த வேடன் கதையில் வரும் அணிலைக்கூட,

மரத்தில் இருந்து குதித்தே அடடா
வாலைக் கிளப்பிககொண் டோடுதே பார்
பார்

என்றுதான் புலவரவர்கள் பாடுகிருர்கள். என்ருலும் வெருளியைக் கண்டு பயந்து ஓடும் பசுவின் வெடிவாலின் நயத்தை அது பெறவில்லை.

வெறும் கத்தரித்தோட்டத்து வெருளியை நல்ல குறிக்கோளோடு புலவரவர்கள் பொருத்தி நிலைபெறச் செய்திருக்கிருர்கள். 'சிங்கத்தின் தோலினைப் போர்த்த கழுதை போல் தேசத்தில் பலருண்டு' என்றும் அங்கவர் தம்மைக் கண்டு ஏமாந்து போகாமல் இருக்க வேண்டும் என்றும் புலவர் இதன் மூலம் வற்புறுத்துகிருர்.

ஆடிப்பிறப்பும், கத்தரி வெருளியும் குழந்தைகளுககு மாத்திரமன்று, பெரியவர்களும் இரசித்து மகிழலாம்; பாடலாம்.

(திறவாத படலை நூலிலிருந்து)

# பகை அறியாத சிறுவர்

## சிவபூரணி விஜயசண்முகம்

அது ஒரு ஈஸ்டர் தினம். காலை வேளை. அக்கிராமத்தில் எங்கு பார்த்தாலும் வெண் பனிப் புகார். பனிக்கட்டிகள் உருகி ஓடை போன்று ஓடிக்கொண்டிருந்தது.

இரு சிறுமிகள் வெவ்வேறு வீட்டிலிருந்து வந்துகொண்டிருந்தனர். அவர்கள் அந்தக் குறுகிய பாதையில் ஒருவரையொருவர் சந்தித்தனர். அப்பாதையின் இருபக்கமும் பண்ணைகள். அந்த இரு பண்ணைகளுக்கூடாகச் செல்லும் கழிவுநீர் ஒரு பெரிய குளமாகத் தேங்கி நின்றது. அவ்விரு சிறுமிகளில் ஒருத்தி மிகவும் சிறியவள். மற்றவள் சற்றுப்பெரியவள். அவர்கள் தாய்மார் அவர்களுக்குப் புதிய உடைகளை அணிவித்திருந்தனர். சிறியவளின் சட்டை லநிறம்; மற்றவளின் சட்டை மஞ்சள்நிறம். ஒவ்வொருவரது தலையையும் சிவப்பு நிறப் பட்டிகள் அலங்கரித்தன. அவர்கள் அப்போது தான் தேவாலயத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். இருவரும் ஒருவருக்கொருவர் தங்கள் புதிய உடைகளைக் காட்டி மகிழ்ந்தனர்.

ணீர் வந்தது. அவள் 'இது மிகவும் ஆழமானது அகுல்யா. எனக்குப் பயமாக இருக்கிறது' என்றாள். 'பயப்படாதே வா. இது அவ்வளவு ஆழமாக இருக்காது' என்றாள் அகுல்யா.

அவர்கள் இருவரும் அருகருகே நெருங்கியதும் 'மலாஷா தண்ணீரை எத்தாமல் கவனமாக நட' என்றாள் அகுல்யா. அவள் அப்படிக் கூறும்பொழுதே மலாஷாவின் கால் சற்று வேகமாகத் தண்ணீரில் ஊன்றியதால் தண்ணீர் தெறித்து அகுல்யாவின் சட்டையில் பட்டது. அத்துடன் அவள் முகத்திலும் கண்களிலும்கூடப் பட்டது.

தனது அழுக்கான உடையைக் கண்டதும் அவளுக்குக் கோபம் வந்தது. மலாஷாவிற்கு அண்மையில் வந்து அவளை நிறுத்தினாள். மலாஷா பயந்தாள். அவளுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. திடீரென மலாஷா குளத்தை விட்டு வெளியேறித் தன்வீட்டை நோக்கி ஓடினாள். அப்பொழுது அகுல்யாவின் தாய் அப்பாதையில் வந்துகொண்டிருந்தாள்.

பின்னர் இருவருக்கும் தண்ணீரில் இறங்கி விளையாட ஆசை. சிறியவள் சப்பாத்துக்களுடன் குளத்தில் இறங்க ஆயத்தமானாள். பெரியவள் அவளைத் தடுத்தாள்.

'மலாஷா அப்படிப் போகாதே. உன் அம்மா உன்னைக் கோபித்துக்கொள்வார். நான் எனது சப்பாத்துக்களைக் கழற்றப் போகிறேன். நீயும் உனது சப்பாத்துக்களைக் கழற்று' என்றாள் அகுல்யா.

இருவரும் தங்கள் சப்பாத்துக்களைக்கழற்றி வைத்தனர். தமது சட்டைகளை முழங்காலளவில் தூக்கிப் பிடித்தபடி குளத்தில் இறங்கினார்கள். மலாஷாவின் காலுக்கு மேல் தண்

அவள் மகளின் அழுக்கடைந்த சட்டையைக் கண்டாள். கோபமடைந்தாள். அகுல்யாவை 'நீ இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறாய்' என்று கோபத்துடன் கேட்டாள்.

'மலாஷா வேண்டுமென்றே இப்படிச் செய்துவிட்டாள்' என்றாள் அவள். இதைக் கேட்டதும் அகுல்யாவின் தாய் மலாஷாவைப் பிடித்து அடித்தாள். மலாஷா அழ ஆரம்பித்தாள். அத்தெருவில் உள்ள அனைவருக்கும் கேட்குமாறு பலமாக அழுதாள். அவள் தாய் வீட்டிலிருந்து வெளியே வந்தாள்.

# நாய்க்குட்டி

துள்ளித் துள்ளி ஓடிவரும்
துடிப்பு மிக்க நாய்க்குட்டி
பள்ளி செல்லும் வேளையிலே
பின்னுல் தொடரும் நாய்க்குட்டி

சுந்தா என்று கூப்பிட்டால்
துள்ளிப் பாய்ந்தே ஓடிவரும்
பந்தை உருட்டி விட்டவுடன்
பாய்ந்து சென்றே கௌவிவரும்

குள்ள மான நாய்க்குட்டி
குழந்தை போலக் குழைந்துவரும்
கள்ளன் வந்தால் துரத்திப்போய்க்
கடித்துக் குதறும் நாய்க்குட்டி.

பாலைக் கண்டால் மகிழ்ச்சியுடன்
பாய்ந்து வந்து பருகிடுமே
வாலை வாலை ஆட்டியெனை
வாஞ்சை யோடு பார்த்திடுமே.

செல்வன் சி. சுஜீதரன்
யாழ் இந்துக் கல்லூரி

'நீ ஏன் என் மகளிற்கு அடிக்கிருய்' என்ருள். பின் கோபமாகக் கத்தித் தன் உறவினர்களை அழைத்தாள். உடனே அவர்கள் பயங்கரமாகச் சண்டைபிடிக்கத் தொடங்கி விட்டார்கள். அப்பாதையில் மக்கள் கூட்டம் நிறைந்து ஒவ்வொருவரும் கத்தினுர்கள். அவர்கள் எல்லோரும் சண்டைபிடித்துக் கொண்டிருந்தனர். அகுல்யாவின் பாட்டி அவ்விடத்திற்கு வந்தார். அவர் அச்சண்டையை நிறுத்த முயற்சி செய்தார்.

'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் நண்பர்களே இப்படி நடந்துகொள்வது சரியானதா? அதுவும் இப்படியான ஒரு நாளிலா? ஈஸ்டரில் சந்தோஷமாக இருக்க வேண்டும். ஈஸ்டர் பண்டிகை சண்டை பிடிப்பதற்கல்ல' என்ருர் பாட்டி.

அவர்கள் வயதான பாட்டி சொல்வதைக் கேட்கவில்லை. பாட்டியைத் தள்ளிவிட்டார்கள்.

இவர்கள் சண்டைபோட்டுக் கொண்டிருக்கும்போது அகுல்யா தன் சட்டையிலிருந்த சேற்றைத் தட்டிவிட்டாள். மறுபடியும் அக்குளத்தை நோக்கிச் சென்ருள். ஒரு கூரிய கல்லை எடுத்தாள். அதனுல் மண்ணைக்கிண்டிக் குளத்து நீரைப் பாதைக்குச் செல்ல விட்டாள்.

விரைவில் மலாஷாவும் அவளுடன் சேர்ந்து கொண்டாள். ஒரு சிறிய தடியை எடுத்தாள். அதனுல் அவளுக்கு மண்ணைக் கிண்ட உதவினுள்.

பாட்டி சண்டையைத் தடுக்க முயற்சி செய்துகொண்டிருந்த இடத்தை நோக்கி இவர்கள் வெட்டிவிட்ட சிறிய ஓடை ஓடிக் கொண்டிருந்தது. அதில் மலாஷாவின் சிறிய தடி விழுந்துவிட்டது.

## டால்ஸ்டாய் கதை

'பிடி அதை மலாஷா! பிடி அதை!' தடியைக் காட்டி கத்தினுள் அகுல்யா. மலாஷா நன்ருகச் சிரித்தாள். அவளால் பேசமுடியவில்லை.

மகிழ்ச்சி நிரம்ப அவர்கள் அச்சிறு தடி ஓடையில் ஓடும் அழகை ரசித்தார்கள். இதனைக் கண்ட பாட்டி அம்மனிதர்களைப் பார்த்து 'உங்களுக்கு உங்களை நினைக்க வெட்கமாக இல்லை? 'இங்கு அச்சிறுமிகளுக்காக நீங்கள் சண்டைபிடிக்கிறீர்கள் அங்கே அவர்கள் எல்லாவற்றையும் மறந்து சேர்ந்து விளையாடுகிருர்கள்' என்ருர்.

'அருமையான சிறு விஷயம். அவர்கள் உங்களிலும் விவேகமுள்ளவர்கள்.'

அம்மனிதர்கள் சிறுமிகளைப் பார்த்து தலை குனிந்தனர். ★

ஒரு வாரமாய் நகரத்தில் இருந்துவிட்டு மீண்டும் வீட்டுக்கு வந்த சந்தோஷம் அவனுக்கு அவன் சட்டென்று எழுந்து வேறிடம் சென்ருன். அவனது புண்பட்ட இதயம் தனிமையை விரும்பியது, ஆகவே அவன் பொதுவாகப் பையன்கள் சந்திக்கும் இடங்களைத் தவிர்த்து அலைந்து திரிந்தான். அப்போது அவன் கண்களுக்கு ஒரு கட்டுமரம் தென்பட்டது. அதன்மீது ஏறி அமர்ந்து கொண்டு பரந்த ஆற்றை உற்றுப் பார்த்தான். அந்தக் கணமே அந்த ஆற்றினுள் வீழ்ந்து மூழ்கிவிடமாட்டோமா என்றிருந்தது அப்படி மூழ்கிவிட்டால் அன்ருடம் சந்திக்கும் வேதனைகள் இருக்காதே என எண்ணினுன்.

ரொம் படுக்கைக்குச் சென்ற சமயம் சிட் விழித்துக்கொண்டான். ஆனுல் அவன் ரொம்முடன் எதுவும் பேசவில்லை ரொம்மிடம் அப்போது ஏதாவது பேசுவது நல்லதல்ல என ரொம்மின் முகத்தைப் பார்த்து அவன் அறிந்து கொண்டான். ரொம் ஆண்டவனைப் பிரார்த்திக்காமலே கட்டிலில் ஏறிப் படுத்துக்கொண்டான். இந்தக் கெட்ட பழக்கத்தை சிட் தன் மனதுட் குறித்துக் கொண்டான்.

திங்கட்கிழமை காலை ரொம் சோயருக்கு உடல்நிலை அவ்வளவு நன்ருய் இருக்கவில்லை. பொதுவாக எல்லாத் திங்கள் காலையும் அவனுக்கு அப்படித்தான் இருக்கும். காரணம், இது இன்னெரு இழுபறிப்படும் கிழமையின், அதாவது, பள்ளிக்கூட வாரத்தின் முதலாம் நாள் அல்லவா.

ரொம் யோசித்தபடியே படுக்கையிற் படுத்திருந்தான். காய்ச்சல் வந்தாலோ என்றிருந்தது. அப்படியானுற்தானே அவன் பள்ளிக்கூடத்திற்கு மட்டம் போடலாம். இப்படி எண்ணியதும் அவனுக்கு வயிற்றை வலிப்பதுபோல் இருந்தது. வயிற்றுவலி கடுமையாக வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனுல் அந்த வயிற்றுவலியோ வந்ததே தெரியாமற் போய் விட்டது. வேறு என்ன சாக்குப்போக்குச் சொல்லலாம் என யோசித்தான். திடீரென அவனுக்குத் தனது முன்வாய் மேற் பற்களுள் ஒன்று ஆடுவது போல் தெரிந்தது. இதுவும் அதிர்ஷ்டந்தான் என்று எண்ணிக்கொண்டான். பின்னர் முனகநினைத்தான். அப்போதுதான் தான் முனகினுல் சித்தி என்ன காரணம் என்று கேட்பாள். பின் ஈவிரக்கமின்றி அந்தப் பல்லைப் பிடித்து இழுத்து விடுவாள்; அப்போது வலியில் உயிர்போய் விடுமே என்ற யோசனை வந்தது. உடனே அதையும் கைவிட்டான். சட்டென்று அவனுக்கு தன் கால்விரலில் இருக்கும் காயம் ஞாபகத்திற்கு வந்தது. கூடவே முன்பு ஒருமுறை ஒரு பையன் இப்படி ஒரு காயம் காரணமாய் கைவிரலையே இழக்க இருந்ததாய் டாக்டர் ஒருவர் சொன்னதும் ஞாபகத்துக்கு வந்தது. உடனே தன்காலை போர்வைக்கு வெளியே எடுத்து அதிலிருந்த காயத்தை ஆராய்ந்தான். அடுத்த கணம் வலியாற் துடிப்பவன் போல் அலற ஆரம்பித்தான்.

**ஆங்கிலத்தில் அமெரிக்க எழுத்தாளர்**
**– மார்க் ருவெய்ன்**
**தமிழில் :–**
**ராணி சின்னத்தம்பி**

ஆனுல் சிட்டோ சுயநினைவே இல்லாதவன்போற் பக்கத்திற் படுத்திருந்தான். ரொம் இன்னும் சத்தமாய் அலறியபடி, வலியாற் துடிப்பவன்போற் தன் காலை ஆட்டினுன்.

ஆனுல் சிட்னியோ அசையவேயில்லை.

ரொம்முக்கு அலறிய அலறலில் மூச்சு வாங்கியது. ஆகவே அவன் சற்றுநேரம் ஓய்வெடுத்தான். பின்னர் மீண்டும் சுருதி லயத்துடன் அலறத் தொடங்கினுன்.

இவ்வளவுக்கும் சிட்டோ தூங்கிக்கொண்டேயிருந்தான்.

ரொம்முக்கு இதற்குமேற் பொறுக்கமுடியவில்லை. 'சிட்! சிட்! என அவனை உலுக்கினுன். இது வேலை செய்தது. எனவே ரொம் மீண்டும் அலறத் தொடங்கினுன். சிட் கொட்டாவி

விட்டான். பின்னர் முறிவெடுத்தபடி ரொம்மை அதிசயமாய்ப் பார்த்தான். ரொம் அலறியபடியே இருந்தான்.

'ரொம், நான் கூப்பிடுகிறேனல்லா, ரொம்'என ரொம்மை அழைத்தான் சிட்.

'பதிலே இருக்கவில்லே.

ரொம் ரொம் இங்கே பார். என்ன நடந்தது, ரொம்? என்றபடியே சிட் ரொம்மை உலுக்கியவாறு அவனது முகத்தை உற்றுப்பார்த்தான்.

'ஐயோ! சிட்! ஐயோ என்னை உலுக்காதே,' என்றுன் ரொம். மிக மிக மெதுவான குரலில் 'விஷயம் என்ன சொல் ரொம் நான் சித்தியைக் கூப்பிடுகிறேன்.'



'ஒன்றுமில்லே. எல்லாம் சற்று நேரத்தில் சரியாய் விடும் நீ யாரையும் கூப்பிட வேண்டாம்.'

'ஆனுல் நான் யாரையாவது கூப்பிட்டேயாக வேண்டும் ரொம், அப்படி முனகாதே கேட்க என்னவோ மாதிரி இருக்கிறது. எவ்வளவு நேரமாய் இப்படிக் கஷ்டப்படுகிருய்?'

'மணித்தியாலக்கணக்காய் ஆ, ஐயோ சிட் என்னை உலுப்பாதே நான் செத்துப் போவேன் போலிருக்கிறது.'

'ரொம், என்னை ஏன் உடனே எழுப்பவில்லே. ஐயோ ரொம் நீ முனகிறதைக் கேட்க எனக்கு வயிற்றைப் பிசைகிறது உனக்கு என்ன செய்கிறது, ரொம்?

'நான் எல்லாவற்றையும் மன்னித்து விடுகிறேன், சிட் (முனகுகிறுன்) நீ எனக்குச் செய்த அனைத்தையும் ஒன்று விடாமல் மன்னித்து விடுகிறேன். நான் இறந்த பின்—'

'ஒ, ரொம் நீ சாகப் போகிருயா? ஐயோ, ரொம், அப்படியிருக்கக் கூடாது. நீ இறக்கக் கூடாது—'

'நான் எல்லாரையும் மன்னித்து விடுகிறேன் (முனகுகிருன்.) எல்லோரிடமும் இதைச் சொல்லிவிடு. சிட். ஆ, சிட் என்னுடைய அந்த யன்னற் சட்டத்தையும் என்னுடைய ஒற்றைக் கண் பூனையையும் புதிதாய் வந்திருக்கும் அந்தப் பெண்ணுக்குக் கொடு. இன்னும் அவளிடம் சொல்லு—'

## ரொம் நோய் வாய்ப்பட்டான்

ஆனுல் சிட்டோ படுக்கையிற் கிடந்த தனது உடைகளையும் எடுத்துக்கொண்டு ஓடினுன். ரொம்மின் கற்பனை அவ்வளவு நன்முக வேலை செய்தது. ரொம்முக்கே உண்மையில் நோய் வந்து விட்டது போன்றதொரு உணர்வாய் இருந்தது. அவனுடைய முனகற் சத்தம் கூட உண்மை போல் இருந்தது.

சிட் மாடிப்படிகளாற் கீழே பாய்ந்து சென்றுன்.

'ஐயோ, சித்தி, ஓடி வாருங்கள். ரொம்முக்கு உயிர் போகப் போகிறது.

,என்ன, உயிர் போகிறதா?'

'ஆம், சித்தி, சற்று நேரங்கூடத் தாமதிக்காதீர்கள். உடனே வாருங்கள்.

'விழல் பேசாதே. நான் இதை நம்பமாட்டேன்.'

இவ்வாறு சொல்லிக் கொண்டே சித்தியும் மனப் பதட்டத்துடன் மாடிப்படி ஏறினுள். சிட்டும் மேரியும் கூட ஓடினர். சித்தியின் முகம் வெளுத்து உதடுகள் துடித்தன. ரொம்மின் கட்டிலருகே போனதும், 'ரொம் உனக்கு என்ன நடந்தது, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கக் கேட்டாள்.

'ஓ, சித்தி, எனது...'

'என்ன நடந்தது. என் ராசா உனக்கு என்ன செய்கிறது?'

'ஐயோ, சித்தி எனது காற்கட்டை விரல் செத்துப்போய் விட்டது.'

இதைக் கேட்டதும் கிழவி தொப்பென்று பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்தாள். உடனே சிரிக்கத் தொடங்கினுள். பின்னர் அழுதாள். பின்னர் அழுவதா சிரிப்பதா என்று தெரியாமற் திகைத்தாள். சற்று நேரமானதும் தன்னிலைக்கு வந்த சித்தி கத்தினுள். 'ரொம், என்னைப் பயப்பட வைத்துவிட்டாய்; போதும் இந்தக் கூத்து: கட்டிலை விட்டு எழும்பு.'

உடனே முனகல் நின்றது. காற் பெருவிரலிலிருந்த வலி இருந்த இடந்தெரியாமற் பறந்து விட்டது. ரொம்முக்குத் தான் முட்டாள் தனமாய் நடந்துவிட்டோம் என்று கூட இருந்தது. என்ருலும் மெல்லச் சமாளித்துக் கொண்டு, 'சித்தி, உண்மையில் என் பெருவிரல் செத்துவிட்டது போல் தான் இருந்தது. அந்த வேதனையில் எனக்குப் பல் வலியே தெரியவில்லை.

'பல் வலியா? உனது பல்லுக்கு என்ன நடந்தது'.


'ஒரு பல் ஆடுகிறது. உயிர் போகிற மாதிரி வலிக்கிறது, சித்தி'

'சரி, சரி, மீண்டும் முனகத் தொடங்காதே. எங்கே வாயைக் காட்டு. ஆம்! அந்தப் பல் ஆடுகிறது தான். இதனுல் நீ ஒன்றும் செத்துப் போகப் போகிறதில்லை. மேரி, ஒரு பட்டு நூற்துண்டும், சமையலறையிலிருந்து ஒரு துண்டு தணலும் கொண்டு ஓடி வா.'

'ஐயோ, சித்தி, கெஞ்சிக் கேட்கிறேன். அந்தப் பல்லைப் பிடுங்காதீர்கள். அது இப்போது வலிக்கவே இல்லை. நான் பள்ளிக்கூடம் போகாம நிற்கப் போவதில்லை. வேண்டாம் சித்தி.'

'ம், பள்ளிக்கூடம் போகாமல் நிற்கப் போவதில்லையா? ஓ! இப்பொழுது அல்லவா குட்டு வெளித்தது. பள்ளிக்கூடத்துக்குக் கள்ளம் போட்டுவிட்டு மீன் பிடிக்கப் போகத்தான் இவ்வளவு நேரமும் நாடகம் ஆடினுயா? ரொம், நான் உன்னை எவ்வளவு நேசிக்கிறேன். ஆனுல் நீயோ உனது குரங்குச் சேட்டைகளால் என் மனதை உடைத்து விடுகிருய்.

மார்க் டுவெய்ன்



இதற்கிடையில், நூற்துண்டு, தணல் எல்லாம் தயாராகி விட்டது. கிழவி நூலை எடுத்து ஒரு நுனியை ரொம்மின் பல்லிற் கட்டினுள். மறுநுனியைக் கட்டிற் சட்டத்திற் கட்டினுள். அடுத்து தணலைக் குறட்டால் எடுத்துச் சட்டெனப் பையனின் முகத்துக்குக் கிட்டக் கொண்டு போனுள். இப்போது பல் கட்டிற் சட்டத்தில் ஆடிக்கொண்டிருந்தது.

எல்லா வேதனையிலும் ஒரு நன்மை இருக்கத்தான் செய்கிறது. ரொம் மற்றப் பையன்கள் பார்த்துப் பொருமைப் படும் படியாக இருந்தான். காரணம், அவன் ஒவ்வொரு பையனைக் கண்டதும் தன் முன்னம் வாய் ஓட்டைப் பல்லால் ஸ்டையிலாக ஒரு துப்பல் துப்பிக் காட்டினுன்.

இப்படிப் பையன்களின் பொருமையைத் தூண்டி விட்டுக் கொண்டு போன ரொம், அப்பாற் போக ஹக்கிள்பெறி பின் என்ற பையனைக் கண்டான்.

(தொடரும்)

# தொழுது வாழ்தல் இல்லையடா!

உணவு உண்டு வாழ்ந்திட
உதவும் தொழிலைச் செய்பவன்
உடையும் தந்து காத்திடும்
உழவன் வாழ்க வாழ்கவே.

வயலில் வேலை செய்பவர்
வியர்வை சிந்தி உழைப்பவர்
உயரும் வழியை உரைத்திடும்
உழவர் வாழ்க வாழ்கவே'

உழுது வயலை விதைப்பவர்
ஊக்க மாக உழைப்பவர்
பழுது இல்லா இவர் வாழ்வில்
தொழுது வாழ்தல் இல்லையடா.

தோட்டம் செய்து காய் கறி
புதிதாகத் தருபவர்
மாட்டைப் போற்றி வாழ்ந்திடும்
தோட்டக் காரர் வாழ்கவே.

எருதிழுத்துச் செல்லவே
ஏரின் காலைப் பிடிக்கிறான்
வெள்ளை யோடு கறுவலும்
விரைந்து விரைந்து சுற்றுமே'

புல்லுப் பிடுங்கி வாழ்பவர்
புதுமை எல்லாம் செய்பவர்
நெல்லுத் தந்து காப்பவர்
நேசமாக வாழ்கவே!

மட்டுவில் சி .சதாசிவம்.


வெளிநாட்டிலும் உள்நாட்டிலும்
வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

**COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE**
**COMPUTER PROGRAMMING IN d BASEIII+**
**WORD PROCESSING**

**பயிற்சிக்காலம்: 2 மாதம்**




- O/Lபடித்த இருபாலரும் சேரலாம்
- கூடிய நேரசெய்முறைப் பயிற்சி
- I.B.M (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும்
- பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற (Diploma) சான்றிதழ் வழங்கப்படும்.

**UNIKCO COMPUTER CENTRE**

No :5 மின்சாரநிலைய வீதி, 2-ம் ஒழுங்கை
(உபதபாற்கந்தோர் அருகாமை)
யாழ்ப்பாணம்.

# வளர்த்த மகன்

மட்டுநகரில் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் சிவராமன். அவர் பணம் படைத்த பிரபு. கருணையுள்ளம் கொண்டவர்; தான தருமங்கள் செய்பவர். அந்நகரிலுள்ளவர்கள் அவரைத் தருமசீலர் என்றே அழைப்பர்.

ஒருநாள் அவர் கற்குடா என்னும் இடத்திலுள்ள கடலுக்கு நீராடச் சென்ருர். நீராடிய பின்னர் அயலிலுள்ள தென்னஞ் சோலையிலிருந்து உணவருந்தத் தொடங்கினர். அப்பொழுது அங்கே சிறுவன் ஒருவன் வந்தான். அவனுக்குப் பத்து வயது இருக்கும். அவனுடல் வாடியிருந்தது. அவன் கந்தையாடை அணிந்திருந்தான். எனினும் அவன் முகம் வசீகரம் உடையதாய் இருந்தது. அவன் சிவராமனை நோக்கி, 'ஐயா பசிக்கிறது' என்று கேட்டான். சிவராமன் புன்முறுவலுடன் அவனுக்கு உணவு அளித்தார். அவன் உணவுண்ட பின்னர், அவனைப்பற்றி அவர் விசாரித்தார். அவன் தனக்குத் தாய் தந்தையார் இல்லை என்றும் தன் பெயர் சுகுணன் என்றும் கூறினன். சிவராமன் அநாதையான சுகுணனைத் தன்னுடன் வசிக்கும்படி அழைத்தார். அவன் மகிழ்ச்சியுடன் சம்மதித்தான்.

சிவராமனுக்குத் துருபதன் என்ற மகன் ஒருவன் இருந்தான். அவன் பணத்திமிர்கொண்டவன். அவன் ஆசிரியர்களையோ, பெரியவர்களையோ சிறிதும் மதிப்பதில்லை. சுகுணனைத் தனது வீட்டு வேலைக்காரன் போல் நடத்தினன். துருபதனுக்கு கல்வி வேப்பங்காயைப் போல் கசந்தது. பாடசாலைக்குச் செல்லாது தீயவழிகளில் செயற்பட்டான். சுகுணனுக்கு கல்வி கற்கண்டைப் போல் இனித்தது. அவன் திறமையோடு படித்தான். பல பரிசில்கள் பெற்ருன். அவன் படிப்பின்மீது காட்டிய ஆர்வத்தைக் கண்டு சிவராமன் மகிழ்ச்சியடைந்தார். தம் மகனின் நிலை கண்டு மனம் வருந்தினர். அவர் சுகுணனைத் தம் மகனுகவே கருதி மேற்படிப்புக்கு அனுப்பினர். அவன் எல்லாத் தேர்வுகளிலும் சிறப்பாகத் தேறினன். அவனை அரசினர் உயர்தர பதவியில் நியமித்தனர்.

விஜிதா பேரம்பலம்
(உறுப்புரிமை எண் 77)
மானிப்பாய் மகளிர் கல்லூரி.

தான் பெற்ற மகன் தீயவனுகி விட்டானே என்ற கவலை சிவராமனை வருத்தியது. அவர் நோயுற்றுக் கிடந்தார். ஒரு நாள் சிவராமனின் ஆவி பிரிந்தது. சுகுணன் தேம்பித் தேம்பி அழுதான். அவருடைய மகன் ஒரு துளி கண்ணீர்தானும் சிந்தவில்லை. தீய நண்பர்களுடன் கூடிக் குடிப்பதும் சூதாடுவதுமே அவனது வேலையாக மாறின. ஈற்றில் தானிருந்த மாளிகையையும் விற்ருன். அதையும் நண்பர்கள் வஞ்சகமாக கவர்ந்து கொண்டனர். அவன் உண்ண உணவும், உடுக்க உடையும் இன்றி அலைந்தான். அதனுல், பிறர் பொருள்களை திருடத் தொடங்கினன். ஒரு நாள் கையும் மெய்யுமாக பிடிபட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான். சுகுணன் துருபதனுக்கு விதிக்கப்பட்ட குற்றப்பணம் முழுவதையும் கட்டி அவனை மீட்டான். துருபதன் சுகுணனைக் கட்டித்தழுவி மன்னிப்புக் கேட்டான். அதன்பின் துருபதன் நல்லவனுக மாறி வியாபாரத்தில் ஈடுபட்டான். துருபதன் ஒழுக்கமில்லாமல் நடந்து பெரியவர்களையும், ஆசிரியர்களையும் மதியாதமையால் தான் இந்நிலை வந்தது. ஆகவே நாங்கள் பெரியவர்களையும் ஆசிரியர்களையும் மதிக்க வேண்டும். ★

# உங்களுக்குத் தெரியுமா?

## பொது அறிவு (வானியல்) வினு - விடை

1. (Galaxy) கேலக்சி என்ருல் என்ன?

விடை; எமது சூரியன் ஒரு விண்மீனுகும். இதைச் சுற்றி ஒன்பது கோள்களும் துணைக் கோள்களும் இருக்கின்றன. எமது சூரியனைப் போன்று பல கோடானுகோடி கதிரவன்கள் சேர்ந்த அமைப்பே கேலக்சி எனப்படும் கதிரவனை உள்ளடக்கிய கேலக்சியை நாம் பால் வெளி (Milk way) என அழைக்கின்ருேம். இதைப் போன்றே எம்மால் கற்பனை பண்ணிக் கூடப்பார்க்க முடியாத அளவு தொடக்கமும் முடிவும் அற்ற இந்தப் பேரண்டத்தில் எண்ணில் அடங்காத கேலக்சிகள் உள்ளன. ஒரு கேலக்சியின் குறுக்களவே பல்லாயிரக்கணக்கான ஒளி ஆண்டுசள் எனின் பற்பல கோடானு கோடி கேலக்சிகள் அடங்கிய இந்தப் பேரண்டத்தின் குறுக்களவு எவ்வளவு என உங்களால் கற்பனை பண்ணிப்பார்க்க முடிகிறதா?

2. வான இயல் நேரம் ஒளி ஆண்டு என்ருல் என்ன?

விடை, ஒளி வினுடி ஒன்றுக்கு ஏறத்தாள (1,86,000 மைல்கள்) 3 00,000 கிலோமீற்றர் தொலைவு செல்லும். அது ஒரு ஆண்டில் கடக்கும் தூரம்தான் ஒளி ஆண்டு என வான இயலில் குறிப்பிடப்படுகிறது. அதாவது ஒரு ஒளி ஆண்டு = 3,00,000 ×60 × 60 × 24 × 365.25 கிலோமீற்றர்=946,728,000,000,000 கிலோ மீற்றர்

3. பூமி தன்னைத்தானே சுற்றிவரும் ஒரு நாளில் சூரியனைச் சுற்றும் பாதையில் பூமி இடம் பெயரும் தூரம் எவ்வளவு?

விடை: பூமியின் நீள்வட்டப் பாதையின் சுற்றளவு $9.358 \times 10^{8}$ கிலோ மீற்றர் எனின் ஒரு நாளில் பூமி இடம்பெயரும் தூரம் ஏறக்குறைய $2.6 \times 10^{6}$ கிலோ மீற்றராகும்.

4. பூமியின் ஈர்ப்புவிசை எந்தப் பகுதியில் மிகவும் குறைவாக இருக்கும்?

விடை: பூமத்திய ரேகையில்

5. பூமியின் ஈர்ப்புவிசை திடீரென்று பூஜ்யமானுல் பூமியின் மேல் உள்ள பொருட்களின் நிலை என்னவாகும்?

விடை: பொருட்கள் வானில் மிதக்க ஆரம்பித்துவிடும்.

6. பூமியின் நிறை இருமடங்கானுல் பூமி சூரியனை ஒரு தடவை சுற்றிவர ஆகும் காலம் மாறுதல் அடையுமா?

விடை; மாறுதல் அடையாது.

7. அயோ (IO) என்பது யாது?

விடை; வியாழக்கோளின் துணைக்கோள்களின் ஒன்றின் பெயர்.

8. பூமிக்கு மிக அருகாமையில் உள்ள கோள் எது?

விடை; வெள்ளி.

9. எமது சூரியனுக்கு அருகாமையில் இருக்கும் கோள் எது? வெகுதொலைவில் இருக்கும் கோள் எது?

விடை; அருகாமையில் இருக்கும் கோள் புதன் ஆகும். வெகுதொலைவில் உள்ள கோள் புளுட்டோ ஆகும்.

10. எமது சூரியனைச் சுற்றிவரும் கோள்களில் கூடிய துணைக்கோள்களைக் கொண்ட கோள் எது?

விடை; வியாழன். இதற்கு 12 துணைக்கோள்கள் உண்டு.

எஸ் ஆர். பேரின்பநாயகம்

# அறிவுலக அறிமுகம்

கலாநிதி சபா ஜெயராசா

பாட்டா படிக்க வேண்டும். அப்பா படிக்க வேண்டும். நானும் படிக்க வேண்டும். நாங்கள் சிறுவர்கள். படித்தல் எங்களது கடமை. பாட்டா தொழில் பார்க்கின்றார். அப்பா தொழில் பார்க்கின்றார். அவர்கள் படிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் கெட்டிக்காரர்களாக வருவார்கள். படிக்காவிட்டால் அவர்கள் தலைகுனிய வேண்டியது தான்.

நாங்கள் பள்ளிக்கூடம் போவோம். படிப்போம்.

பள்ளி என்றால் பூஞ்சோலை
பூக்கள் என்றால் புத்தகங்கள்
அள்ள அள்ளத் தேன் சொரியும்
பள்ளிக்கூடம் போய்வருவோம்.

குருண்ரிவிக் என்பவர் சிறந்த கல்விமான். வயது வந்தோரும் படிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அதன் பொருட்டு அவர் ''நாடேடி உயர் பள்ளிக் கூடங்கள்'' என்பவற்றை உருவாக்கினார். நோர்டிக் நாடுகளில் 'நாடோடி உயர் பள்ளிக்கூடங்கள்' காணப்படுகின்றன.

தென்அமெரிக்க நாடுகளை இலத்தீன் அமெரிக்க நாடுகள் என்று கூறுவோம் வளர்ந்தோர் படிக்க வேண்டும் என்று அங்குள்ளவர்கள் விரும்புகின்றார்கள். அதற்காக 'வெகுசன பல்கலைக்கழகங்கள்' உண்டாக்கப்பட்டுள்ளன.

கியூபாவில் எழுத வாசிக்கத் தெரியாத பாட்டாக்கள் பலர் இருந்தார்கள். அவர்களைப் படிக்கவைக்க அரசாங்கம்விரும்பியது. முதியோர் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. இப்போது அங்குள்ள பாட்டாக்கள் பள்ளிக்கூடம் போகின்றார்கள். இந்தியாவிலும் பாட்டாக்களுக்குப் பள்ளிக்கூடங்கள் உண்டு அவர்கள் நன்றாகப் படிக்கின்றார்கள்.

## படிக்கத் தொடங்கிய பாட்டனர்

பாட்டாமாரும் படிக்க வேண்டும். அவர்களுக்கும் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. கொன்பூசியஸ் என்ற ஓர் அறிஞர் சீன தேசத்தில் இருந்தார். அப்பாமாரும் அம்மாமாரும் படிக்க வேண்டும் என்று அவர் சொன்னார்.

திருவள்ளுவர் என்ற ஓர் அறிஞர் தமிழ்நாட்டில் இருந்தார். பாட்டா மட்டுமென்ன பாட்டியும் படிக்க வேண்டும் என்று சொன்னார்.

ஔவை என்பவர் பாட்டிதானே. அவர் வயது முதிர்ந்த காலத்திலும் படித்துக் கொண்டிருந்தார்.

நமது கிராமங்களில் முன்பு 'நிலாப் பள்ளிகள்' இருந்தன. வயது வந்தோர் பகல் முழுவதும் வேலை செய்வார்கள். இரவில் அவர்கள் படிப்பார்கள். உபாத்தியாயரது வீட்டுமுற்றத்தில் வகுப்பு நிகழும். உபாத்தியாயர் ஒரு கதைப் பெட்டகம். நல்ல நல்ல கதைகள் சொல்வார்.

பாட்டா பள்ளிக்குப் போகின்றார். படிக்கின்றார். நாங்களும் படிக்க வேண்டும். பாட்டாவை முந்த வேண்டும்.

பள்ளி என்றால் பூஞ்சோலை
பாலர் என்றால் நறும்பூக்கள்
துள்ளித் துள்ளிப் படித்துயரப்
பள்ளிக்கூடம் போய் வருவோம்.

## அர்ச்சுனு சிறுவர் வட்டம்

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அர்ச்சுனு சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் 'அர்ச்சுனு'வில் வெளியாகும் 3 கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை, கவிதை, கட்டுரைகள் ஏனையவை அர்ச்சுனுவில் வெளியாகும்.

மாணவர்கள் தமது ஆக்கங்களைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும். மாணவர் தானுகவே எழுதினர் என்று வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உறுதியுரை வழங்க வேண்டும்.

அங்கத்தவர் உறுப்புரிமை அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

### அர்ச்சுனு சிறுவர் வட்டம்

முழுப்பெயர் : செல்வன் / செல்வி .........

............................................

............................................

வகுப்பு: ...................... வயது .........

பாடசாலையின் பெயர்: ......................

............................................

வீட்டுமுகவரி: ............................

............................................

மாணவரின் கையொப்பம்: ..................

............................................

அதிபர் கையொப்பம்: ........................

............................................

அனுப்பவேண்டிய முகவரி:-
ஆசிரியர்
'அர்ச்சுனு'
அஞ்சல் பெட்டி எண்: 23
யாழ்ப்பாணம்.

## அர்ச்சுனு சிறுவர் வட்ட உறுப்பினர்கள்

| பெயர் | உறுப்புரிமை எண் |
|---|---|
| செல்வன் ஞானேந்திரன் தஜிதரன் கொக்குவில் இந்துக்கல்லூரி. | 86 |
| செல்வி இராசதுரை சுகந்தினி வ / பாவற்குளம் மகாவித்தியாலயம். | 87 |
| செல்வன் தர்மலிங்கம் பிரபாகரன் கிளி / பளை மகாவித்தியாலயம். | 88 |
| செல்வன் கதிரமலை விக்னேஸ்வரன் யா / ஸ்கந்தவரோதய கல்லூரி. | 89 |
| செல்வன் நடராசா ஆனந்தன் யா / நாவற்குழி மகாவித்தியாலயம். | 90 |
| செல்வன் பரம்சோதி கண்ணன் ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை. | 91 |
| செல்வன் துரையப்பா சத்யன் யாழ் / மத்திய கல்லூரி. | 92 |
| செல்வி நிசாந்தினி தேவபாலன் கணேசாவித்தியாலயம் நாரந்தனை. | 93 |
| செல்வன் திருச்செல்வம் மயூரன் புனித மரியாள் வித்தியாலயம் யாழ்ப்பாணம் | 94 |
| செல்வி சுகிர்தா இராமசாமி யா / மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை. | 95 |
| செல்வன் தயாபரன் அரியநாயகம் யா / ஹாட்லி கல்லூரி | 96 |
| செல்வன் தர்மச்சந்திரன் கஜேந்திரா யா / மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் | 97 |
| செல்வன் மகாலிங்கம் சாந்தீபன் பளை மகாவித்தியாலயம் | 98 |
| செல்வன் குணசேகரன் சுஜீவன் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை | 99 |
| செல்வன் செந்திரு கதிர்காமத்தம்பி மானிப்பாய் மகளிர் கல்லூரி. | 100 |

# கணிதப் புதிர்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | =264 |
| 18 | 99 | 86 | 61 | =264 |
| 66 | 81 | 98 | 19 | =264 |
| 91 | 16 | 69 | 88 | =264 |
| 89 | 68 | 11 | 96 | =264 |
| = | = | = | = | =264 |
| 264 | 264 | 264 | 264 | |

எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் கிடையாகவோ நிலைக்குத்தாகவோ மூலைவிட்டமாகவோ கூட்டினால் விடை 264 ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 96 | 11 | 89 | 68 | =264 |
| 88 | 69 | 91 | 16 | =264 |
| 61 | 86 | 18 | 99 | =264 |
| 19 | 98 | 66 | 81 | =264 |
| = | = | = | = | = =264 |
| 264 | 264 | 264 | 264 | 264 |

இதையே தலைகீழாக வைத்து கிடையாகவோ நிலைக்குத்தாகவோ மூலைவிட்டமாகவோ கூட்டினால் விடை 264 ஆகும்.

ஆக்கம்: பேரின்பம்

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சிறுவரும் ....

ஒரு நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்குவதற்கும், சிறுவர்களுக்கு செயல்முறையான மதபோதனை அவசியம். இன்றைய மலர்களே நாளைய கனிகள். கனிகளே இனத்தை பெருக்குகின்றன. நல்ல கனிகளில் இருந்தே நல்ல பரங்கள் தோன்றும். எனவே சிறுவர் மனதில்மத நம்பிக்கையை வளர்த்தாற்றான் மதம் சிறுவருடன் சேர்ந்து வளரும் சமுதாய நன்மையும் ஆன்ம ஈடேற்றமும் கிட்டும்.

(அகில இலங்கை இந்து இளைஞர் பேரவை நடாத்திய பேச்சுப்போட்டியில் கீழ்ப் பிரிவில் முதலிடம் பெற்ற பேச்சு இது. பரிசு பெற்றவர் செல்வி. சுஜிதா சண்முகராசா தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மாணவி.)

# சட்டை

அந்த அறையில் இரண்டு சட்டைகள் தொங்கியபடி இருந்தன.

அவற்றில் ஒன்று விலை உயர்ந்த டெரிலின் துணியால் தைக்கப்பட்ட சட்டை. மற்றது சதாரண கைத்தறி துணியாலான சட்டை.

நவக்கிரகத்தைப் போல் எப்போது பார்த்தாலும் இந்த இரண்டு சட்டைகளும் ஓயாமல் சண்டை போட்ட வண்ணம் இருந்தன. டெரிலின் சட்டைக்குச் சாதாரணச் சட்டையை கண்டால் பிடிக்காது. டெரிலின் சட்டை போல் சாதாரண சட்டை விலை உயர்ந்த பொருளாக இல்லை. அதனாலே டெரிலின் சட்டை அந்த சாதாரணச் சட்டையைப் பார்க்கும் போதெல்லாம் கேலி செய்வதும், 'கெக்' என்று ஏளனமாகச் சிரிப்பதுமாக இருந்தது.

டெரிலின் சட்டையின் ஏச்சுப் பேச்சுக்களையும் கேட்டுக் கொண்டே பல மணி நேரம் சாதாரண சட்டை அமைதியாக இருக்கும். ஒரு நாள் சாதாரண சட்டைக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. டெரிலின் சட்டையின் பேச்சை அதனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எத்தனை நாளைக்குத்தான் அது பொறுத்திருக்கும்? ஆனால் அன்றைக்கோ டெரிலின் சட்டையின் இதயத்தை தொடும்படியாக சில வார்த்தைகளை சாதாரண சட்டை கூறியது.

'ஏய் டெரிலின் சட்டையே! என்னைத் தன் உடலை மறைப்பதற்காக மூடிக்கொண்டிருப்பவன், இந்த உலகத்தின் மூட நம்பிக்கைகளை அவனுடைய எழுத்தால் சொல்லக் கூடியவன். இன்றில்லா விட்டாலும் என்றைக்காவது ஒருநாள் நிச்சயம் அவனை உலகம் பாராட்டத்தான் போகிறது. வறுமை அவனோடு உடன்பிறந்த சொத்து. அவனுடைய உள்ளத் தூய்மையோ இந்த உலகத்தில் யாருமே பெறமுடியாத கண்ணுக்குப் புலப்படாத ஒரு பொருளாகும்.

# செய்த

உன்னை அணிந்திருக்கிறவன் உள்ளத்தை கறையாக்கி கொண்டவன் அதனால்தான் அவன் மற்றவர்களை எப்படியோ ஏமாற்றி பொருள் குவிப்பதே அவன் லட்சியமாக கொண்டிருக்கிறவன். பொருளுக்கு ஆசைப்படாதவன் உலகுக்குக்கு உயர்ந்த பொருளை கூறுகின்றான். பொருளை எண்ணி அவனும் வாழ நினைத்தால் அவனுடைய எழுத்துக்கள் அத்தனையும் தூய்மை இல்லாத, மற்றவர்களின் இதயத்தை இருளாக்கும் கொடிய நஞ்சாக மாறிவிடும். அதனால் தான் ஆண்டவன் அவனை வறுமையாகவே இருந்து வாழும்படி படைத்து விட்டானோ என்னவோ?

'இதை நீ நன்றாக புரிந்து கொண்டால் என்னைப் பற்றி மீண்டும் பேசமாட்டாய். யானைக்கொருகாலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்' என்றுகூறி சாதாரண சட்டை அதன் பேச்சை நிறுத்தியது.

அதற்கு டெரிலின் சட்டை சாதாரண சட்டையை பார்த்து, 'ஏய் பிச்சைக்காரப் பயலே! உன் வயிற்றுக்குத் தான் சோறில்லை. என்றாலும் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது குளிக்க வேண்டாமா? கிட்ட நெருங்க அருவருப்பா இருக்கிறதே அப்பா! என்ன நாற்றம்! உன்னை யார் சேர்ப்பார்கள்? நீ எனக்கு தத்துவம் சொல்ல வந்து விட்டாயா? முட்டாள், பிழைக்கத் தெரியாதவன். இன்னொரு தடவை இப்படிச் சொன்னால் இந்த இடத்தில் இருக்க மாட்டாய்! ஜாக்கிரதை! பேசாமல் உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ' எனக் கூறி நிறுத்தியது.

அப்போ யாரோ அந்த அறைக்கதவை தட்டும் சத்தம் கேட்டது. ஓசை வந்த திக்கை நோக்கி இரண்டு சட்டைகளும் ஒருசேரப் பார்த்தன. அறைக்கதவு திறக்கப்பட்டது. இரண்டு சட்டைகளுக்கும் ஒரே வியப்பு. அவற்றின் கண்களை அவைகளாலேயே நம்ப முடியவில்லை.

# அசட்டை

போலீஸ் சப் - இன்ஸ்பெக்டரும் சில போலீஸ்காரர்களும் அந்த அறைக்குள் வந்து நின்றனர். உறங்கிக் கொண்டிருந்த டெரிலின் சட்டை ஆசாமியைத் தட்டி எழுப்பினர்.

**T பரணீதரன்**
யாழ் மத்திய கல்லூரி

'ஏம்பப்பா, உன் பேருதானே சின்னராசு என்கிறது?' என்று

(34 ஆம் பக்கம் பார்க்க)



# சிறந்த ஒல்ரவுண்டர்

தி. தவபாலன்

### இம்ரான்கான்

★ வீரர்களை திரம்பட ஆட்டிவைக்கும் திறன்,

★ சிறந்த ஓல்ரவுண்ட் வீரர்,

★ சிறந்த வலக்கை ஆட்டக்காரர்.

★ உலக பந்துவீச்சாளர்களில் ஆட்டக் காரரை திணறடிக்கும் வேகப் பந்துவீச்சாளர்.

★ கூர்ந்து கவனித்து சிறப்புடன் பீல்டிங் செய்யும் தகைமை.

இந்த தகைமைக்கெல்லாம் இலக்கணமாக விளங்குபவர், பாகிஸ்தான் அணியின் தலைவர் இம்ரான்கான்.

இந்த வீரர் பிறந்தது 6ம் தேதி. ஜனவரி மாதம் 1959ம் ஆண்டு. கிரிக்கட் வீரராக அல்ல குழந்தையாக.

தனது பந்துவீச்சால் அனைத்து நாட்டு கிரிக்கட் ஆட்டக்காரர்களை திணறடித்தார்.

1980 ஆம் ஆண்டு நவம்பர் 24ம் தேதி பாகிஸ்தானில் மேற்கிந்திய அணிகளுக்கெதிராக ஆடி தனது 30 வது டெஸ்டில் 48 வது இனிங்ஸில் முதல் 1000ஓட்டங்களை கடந்தார்.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் திகதி அவுஸ்திரேலியாவிற்கெதிராக மெல்பேர்ண் நகரில் ஆடி 2000 ஓட்டங்களைக் கடந்தார். அத்துடன் 200விக்கட்களையும் கைப்பற்றினர்.

இதுவரை நடந்த 4 உலகக்கோப்பை ஆட்டங்களிலும் ஆடியவர். எந்தக் கோப்பையையும் கைப்பற்ற பாகிஸ்தான் அணிக்கு உதவ முடியவில்லை. ஆனுல் பாகிஸ்தான் அணிக்கு 34 டெஸ்ட்களில் தலைமை தாங்கி 12 வெற்றிகளைத் தேடித் தந்தார். சராசரி 58.82

### இம்ரான்கானின் ஆட்டவிபரம்: (1989 மார்ச் வரை)

இதுவரை 75 டெஸ்ட் ஆட்டங்களில் ஆடி 3000 ஓட்டங்களை எடுத்துள்ளார். தனது நாட்டில் 28 ஆட்டங்களில் 1,012 ஓட்டங்களை எடுத்தார். பிறநாடுகளில் 47 ஆட்டங்களில் ஆடி 1988 ஓட்டங்களை எடுத்தார்.

தனது நாட்டில் ஆடிய ஆட்டங்களில் 6399 பந்துகளை வீசி 2557 ஓட்டங்களைக் கொடுத்து 146 விக்கட்களை கைப்பற்றினர். மெய்டன்கள் 259. சராசரி 17.51

பிறநாட்டு மைதானங்களில் ஆடிய ஆட்டங்களில் 11,129 பந்துகள் வீசி 4871 ஓட்டங்களை கொடுத்து 194 விக்கட்களை கைப்பற்றினர். மெய்டன்கள் 390. சராசரி 25.10.

## சேர்ந்துழைப்போம்

சேர்ந்து நன்றே நண்பர்கள் நாம்
சேர்ந்துழைப்போமே
சேர்ந்து ஒன்றுய் மகிழ்ந்து செல்வம்
சேகரிப்போமே.

ஒன்று சேரும் கைகள் உலகை
ஓங்கச் செய்திடும்
ஒன்று கூடும் உயர்ந்த பண்பில்
உவகை கூடிடும்.

அறிவும் ஆற்றல் அன்பும் கூட
ஆளும் அமைதிதான்
நெறிநின் றுழைக்கும் வாழ்வில்
என்றும்
நிலைக்கும் செல்வந்தான்.

உள்ளத் துறுதி உண்மை சேர
உயரும் உறவுதான்
வெள்ளை மனங்கள் இணையவிளங்
கும்
வெற்றி இன்பந் தான்.

— செ. மகேந்திரன்

மொத்தமாக 17,529 பந்துகள் வீசி 7428 ஓட்டங்களைக் கொடுத்து 340 விக்கட்களை எடுத்தார்.

**பிறநாடுகளுடன் ஆட்டவிபரம்:**

இங்கிலாந்து அணியுடன் 12 ஆட்டங்களில் ஆடி 500 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்சமாக 118 ஓட்டங்களை எடுத்தார். ஒரு தடவை 100 ஓட்டங்களும் 2 தடவை 50 ஓட்டங்களையும் எடுத்தார். 2921 பந்துகள் வீசி 1158 ஓட்டங்களை கொடுத்து 47 விக்கட்களை கைப்பற்றினுர். மெய்டன்கள் 116.

நியூசிலாந்திற்கெதிராக 7 ஆட்டங்களில் ஆடி 308 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்சமாக 71 ஓட்டங்களை எடுத்தார் 21953 பந்துகள் வீசி 1158 ஓட்டங்களை கொடுத்து 30 விக்கட்களை கைப்பற்றினுர். மெய்டன்கள் 58.

அவுஸ்திரேலியாவுடன் 15 ஆட்டங்களில் ஆடி 583 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்ச ஓட்டங்கள் 85 ஆகும். 3574 பந்துகள் வீசி 1431 ஓட்டங்களை கொடுத்து 60 விக்கட்களை கைப்பற்றினுர். மெய்டன்கள் 124.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக 15 ஆட்டங்களை ஆடி 624 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்சமாக 123 ஓட்டங்களை எடுத்தார். 100 ஓட்டங்களை ஒரு தடவையும் 50 களை 2 தடவையும் எடுத்தார். 3,380 பந்துகளை வீசி 1641 ஓட்டங்களை கொடுத்து 76 விக்கட்களை கைப்பற்றினுர். மெய்டன்கள் 106.

தன் அண்டை நாடான இந்தியாவிற்கெதிராக 19 டெஸ்ட்களில் ஆடி 829 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்சமாக 135 ஓட்டங்களை எடுத்தார். 2 தடவை 100களும், 50களும், எடுத்தார். 3966 பந்துகள் வீசி 1756 ஓட்டங்களை கொடுத்து 81 விக்கட்களை எடுத்தார். இம்ரான் அதிகமான விக்கட்களை கைப்பற்றியது இந்திய அணியிடமிருந்துதான். மெய்டன்கள் 170.

இலங்கை அணியுடன் 7 ஆட்டங்களில் ஆடி 156 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்சமாக 63 ஓட்டங்களை எடுத்தார். 1734 பந்துகள் வீசி 657 ஓட்டங்களை கொடுத்து 46 விக்கட்களை கைப்பற்றினுர் மெய்டன்கள் 75.

வெகு விரைவில் இம்ரான்கான் யுனிசெப்பில் அங்கத்தவராக சேரவிருக்கின்றுர். தான் ஒரு மூன்றும் உலக நாட்டுப் பிரஜை. தன் நாட்டில் நிலவும் பசி, பட்டினி, குழந்தைகளின் நலிவு பற்றி உலகிற்கு எடுத்துரைக்க இந்த அங்கத்துவம் உதவும் என இம்ரான் கூறுகின்றுர்.

லப்பாம் டப்பாமிற்குப் புதிதாக ஒரு ஆசை நெஞ்சில் துளிர்விட்டது.

ஒருநாள் பள்ளியில் இருந்து வீட்டிற்கு வரும்போது, ஒரு சிறுவன் சைக்கிள் ஓட்டிக் கொண்டு வந்தான். அதைப் பார்த்ததும் இருவரும் பிரமித்துப் போனார்கள். இந்தச் சிறுவன் சைக்கிள் ஓட்டும்போது தங்களால் ஏன் முடியாது என்ற எண்ணம் ஏற்பட்டது. அந்த எண்ணம் ஆசையாக உருவெடுத்தது. எப்படியும் சைக்கிள் ஓட்டவேண்டும் என்ற தீராத ஆசை நெஞ்சில் எழுந்தது.

டப்பாமிற்குத் திடீரென ஒரு சந்தேகம் வந்தது. 'எப்படிடா ஒரே நேரத்தில ரெண்டு சில்லும் சுத்துது'' என்று கேட்டான்.

# கொழும்பு மாமா கொடுத்த சைக்கிள்

லப்பாம் சிரித்தான். இதுகூடத் தெரியாதா. வலது பெடலை அமத்தப் பின்சில்லு சுத்தும். இடது பெடலை அமத்த முன்சில்லு சுத்தும்' என்றான் பெரிய மேதாவிபோல.

டப்பாமிற்குப் பெருமையாயிருந்தது. லப்பாம் எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறானே என்று பெருமைப்பட்டான்.

சைக்கிளுக்கு எங்கே போவது என்று இருவரும் யோசித்தனர். திடீரென லப்பாமிற்கு மார்க்கண்டின் நினைவு பளிச்சிட்டது.

மார்க்கண்டு இவர்களுடைய வளவில் கள்ளுச் சீவுவதற்கு வருபவன். இவர்கள் வீட்டில் சைக்கிளை வைத்துவிட்டு அடுத்த வளவிற்கும் போய் கள்ளுச் சீவுவது வழக்கம். அவனுடைய சைக்கிளை எடுத்து ஓட்டத் தீர்மானித்தார்கள்.

அன்றுமாலை வழக்கம்போல மார்க்கண்டு சைக்கிளை வைத்துவிட்டுப் போனதும் இருவரும் சைக்கிளை எடுத்து ஒழுங்கைக்கு கொண்டுசென்றனர்.

டப்பாம் சைக்கிள் சீட்டின் பின்பக்கம் பிடிக்க லப்பாம் ஏறினான். ஹான்டிலை கெட்டியாகப் பிடித்தான். டப்பாம் சைக்கிளைத் தள்ள, லப்பாம் கீழே பார்த்தபடி பெடலை மிதித்தான்.

அந்த நேரம் அதே ஒழுங்கையில் சாத்திரியார் வந்து கொண்டிருந்தார். அவர் நிலத்தைப் பார்த்தபடி வந்துகொண்டிருந்தார். இவர்களையோ, சைக்கிளையோ கவனிக்கவில்லை.

சாத்திரியார் என்றால் இருவருக்கும் பயம். முதலில் அவரைக் கண்ட லப்பாம், பயத்தினால் உடல் நடுங்க 'சாத்திரியார்டா' என்று சொல்லிவிட்டு சைக்கிளைவிட்டுக் குதித்து, பக்கத்தில் இருந்த பற்றைக்குள் பதுங்கி ஒளித்தான். சைக்கிளை தள்ளிய டப்பாம் நிமிர்ந்து பார்த்துவிட்டு, உடனே சைக்கிளை விட்டு விட்டு மின்னல் வேகத்தில் ஓடி லம்பாமுடன் பதுங்கினான்.

**வில்வம் பசுபதி**

சாத்திரியார் குனிந்து பார்த்தபடி வந்து கொண்டிருந்தார். தள்ளிவிடப்பட்ட சைக்கிளின் முன் சக்கரம் அவருடைய முழங்காலில் மோதி பக்கவாட்டில் சரிந்து விழுந்தது.

சாத்திரியார் நிலைகுலைந்து, திடுக்கிட்டு, நிமிர்ந்து பார்த்தார். திடீரென சைக்கிள் மோதியதில் ஏற்பட்ட திகைப்பு, யாரும் இல்லாது சைக்கிள் மட்டும் இருப்பதைப் பார்த்ததும் ஆச்சரியமாக மாறியது. அங்கும் இங்கும் பார்த்தார். ஒருவரும் தென்படவில்லை. மெல்லக் குனிந்து சைக்கிளை நிமிர்த்தி, ஹான்டிலில் பிடித்துக்கொண்டு நின்றார்.

அந்நேரம் மார்க்கண்டு பதறிக்கொண்டு ஓடிவந்தான். 'ஏன் சாமி நீ சைக்கிள் வேணுமின்னா என்னை ஒருவாட்டி கேக்கவேணுமா. நான் எங்கேயெல்லாம் தேடினேன்' என்றான்.

சாத்திரியார் ஒன்றும் புரியாமல் அவனையே ஒருகணம் உற்றுப்பார்த்தார். பின்பு 'முதலில் நீ மரியாதையாய்ப் பேசு' என்றார்.

'எனக்குப் பேச நேரமில்லை சாமி. ஐந்து மரம் சீவக்கிடக்கு' என்று சொன்னவன் சைக்கிளை எடுத்துக்கொண்டு போனான்.

சாத்திரியார் சிலைபோல் நின்று அவன் போன திசையைப் பார்த்தார்.

பற்றைமறைவில் இருந்து நடந்தவற்றைக் கவனித்த இருவரும் பயத்தினால் நடுங்கிப் போனார்கள். 'மார்க்கண்டு பயங்கரமான ஆள் இனி அவன்ரை சைக்கிளைத் தொடக்கூடாது' என்றான் லப்பாம்.

அவர்கள் மேல் தாய்க்கு இரக்கம் ஏற்பட்டது. பிள்ளைகள் சைக்கிளுக்கு ஆசைப்படுகிறார்கள். அவளால் வாங்க இயலாது. சின்ன வயசில் வீட்டை விட்டுப் போன தன் தம்பியின் ஞாபகம் வந்தது. 'மாமா கொண்டு வருவார்' என்றாள். அவர்கள் இதற்குமுன் கேள்விப்பட்டதே இல்லை.

'யாரம்மா மாமா' என்றார்கள். 'கொழும்பில் இருக்கிறார். வரேக்கை கொண்டுவருவார்' என்றாள். இவர்களைத் திருப்திப்படுத்த அவள் பொய் சொன்னாள்.




சாத்திரியார் போனபின்பு இருவரும் வீட்டிற்குப் போனார்கள். வீட்டிற்குப் போனதும் அம்மோய் பள்ளிக்குப் போக சைக்கிள் வாங்கித் தா. சைக்கிள் இல்லாமல் பள்ளிக்கு வரவேணும்' என்று வாத்தியார் சொன்னவர்' என்றான் லப்பாம்.

தாய்க்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. 'யாரடா அந்த வாத்தி. பேனை இல்லாமல் புத்தகமில்லாமல் வரவேணுன்னு பரவாயில்லை. நான் அவரோடே பேசிக்கிறன்' என்று சத்தம் போட்டாள்.

இருவரும் பதறிப் போனார்கள். தாய்க்கு இப்படிக் கோபம் வந்ததைக் கண்டதேயில்லை. 'அம்மோய் வாத்தியைக் கேக்காதே. அடிக்கும். நான் சும்மா சொன்னனான்' என்று கையைப் பிடித்துக் கெஞ்சினான். பின்பு 'அம்மோய் சைக்கிள் வாங்கித்தா' என்று கெஞ்சினான். டப்பாமும் சேர்ந்து தாயைக் கேட்டான்.

லப்பாம் டப்பாம் இதைக்கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தார்கள். தங்களுக்கும் கொழும்பில் ஒரு மாமா இருக்கிறார் என்று எண்ணிப் பெருமைப்பட்டார்கள்.

'அவர் எப்படியம்மா இருப்பார்' என்று லப்பாம் கேட்டான்.

'கழுத்தில் லேஞ்சி கட்டியிருப்பார் கறுத்த பெனியன் போட்டிருப்பார்' என்றாள். அவள் கூறியதைக் கேட்ட இருவரும் பூரித்துப் போனார்கள். கொழும்பு மாமா எப்போ சைக்கிளுடன் வருவார் என ஆவலோடு காத்திருந்தார்கள்.

அடுத்தநாள் மாலை இருவரும் வீதி வழியே போய்க் கொண்டிருந்தபோது கறுத்த பெனியன் அணிந்து, கழுத்தில் லேஞ்சி கட்டியபடி ஒருவன் தூரத்தில் வருவதைக் கண்டார்கள்.

'டேய் கொழும்பு மாமா வாறார்டா' என்றான் லப்பாம். 'சைக்கிள் கொண்டாறார்டா'

(36 ஆம் பக்கம் பார்க்க)

# வல்லவனுக்கு வல்லவன்

கமலா பாடசாலையை நோக்கி ஓட்டமும், நடையுமாகச் சென்றுகொண்டிருந்தாள். அவ ளின் தோற்றம் பார்ப்பவர்களைக் கவர்ந்தது ஆனாலும் கமலா செல்வம் நிறைந்த பெண் ணன்று. அவளும் கணவனை இழந்துவிட்ட அவளது தாயாருமே அந்த நகரில் மிகக் கம் பீரமாகக் காணப்படும் மாளிகை போன்ற வீட்டிற்கருகில் ஒரு சிறு குடிசையில் வாழ்ந்து வருகின்றனர். அவளது தாயார் அந்த மாளிகை போன்ற வீட்டிலே சமையல் வேலை செய்து தனது மகளைப் படிக்கவைத்து அவ ளது வேறு தேவைகளையும் பூர்த்தி செய் வாள்.

டின் உரிமையாளர் ஆவார் அதன்பின் ஆசி ரியர் அவர்கள் இருவரின் பெயரையும் எழுதி அதிபரிடம் கொடுக்கச் சென்றார். அதிபரிடம் சென்ற ஆசிரியர் அடுத்தநாள் தேர்வு நடை பெறுமெனக் கூறினர். அதன் பின்பு இடை வேளை விட்டு மறுபாடங்கள் ஆரம்பமாகின.

கடைசிப் பாடமான ஆங்கிலம் நடை பெற்றுக் கொண்டிருக்கும் போது ஒரு மாணவி அவ்வகுப்புக்குச் சென்று கடற்கரைக் காட் சியை மறுநாள் வரைவதற்கு ஆயத்தமாக வரும்படி கூறிச்சென்றாள். சிறிது நேரத்தின் பின் பாடசாலை முடிவடைந்தது. வீட்டிற்குச் சென்ற விமலா தனது தாயார் தயாரித்த

**நல்லூர் கல்விவள நிலையம் நடத்திய சிறுகதைப் போட்டியில் கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கதை.**

கமலா பாடசாலையை அடைந்ததும் பாட சாலை தொடங்குவதற்கான மூன்றும் மணியும் அடித்தது. அவள் வகுப்பை அடைந்த சிறிது நேரத்தில் அதிபர் அவளது வகுப்புக்குச் சென் ருர். அவர்கள் எல்லோரும் எழுந்து நின்று காலைவணக்கம் செலுத்தினர். அவரும் காலை வணக்கம் கூறினர். பின்பு அவர் அவர்களி டம் அவர்களது பாடசாலையில் பொருட் காட்சி நடைபெறப்போவதாகக் கூறி விடை பெற்றார். அவர் வெளியே சென்று அவ் வகுப்பு ஆசிரியரான திருமதி நவம் வருவதைக் கண்டு பொருட்காட்சிக்குப் படங்கள் வரைய இரண்டு மாணவிகளைத் தேர்ந்தெடுக்கும்படி கூறிச் சென்றார்.

அதன்பின்பு வகுப்பறைக்கு வந்த ஆசிரி ரியர் படங்கள் கீற இருவரைத் தேர்ந்தெடுக் கும்படி எல்லா மாணவிகளையும் பணித்தார். எல்லா மாணவிகளும் கமலாவைத் தேர்ந் தெடுத்தனர் அதன் பின்பு வேறு ஒருவரை யும் தேர்ந்தெடுக்கும்படி ஆசிரியர் கேட்க மாணவிகள் கமலாவின் தாயார் வேலைசெய் யும் வீட்டு முதலாளியின் மகளான விமலா வைத் தேர்ந்தெடுத்தனர். விமலாவின் தகப் பனர் கடதாசி விற்பனைச் சாலைகள் இரண்

உணவை உண்டுவிட்டு தனது தாயாரிடம் கூறிக் கடற்கரைக் காட்சியை வரைவித்தாள். அதோடு படம் வரைவதற்குத் தேவையான பொருட்களையும் எடுத்து வைத்தாள். ஆனல் கமலாவோ களவாகப் படம் கீறுவிக்காமல் படம் கீறுவதற்கான பொருட்களை மட்டுமே எடுத்து வைத்தாள். சிறிது நேரத்தில் இருள் கவியத் தொடங்கியது. கமலா படிக்கத் தொடங்கினள். ஆனல் விமலாவோ தான் தெரிவில் எடுபடப் போகின்ருள் என்ற மகிழ்ச் சியில் திளைத்திருந்தாள்.

செல்வி. **துஷ்யந்தி குமார்**
இந்து மகளிர் கல்லூரி

பொழுது புலர்ந்தது. கமலா எழுந்து படித் தாள். நேரம் 7 மணியிருக்கும். விமலா பாட சாலைக்குச் செல்ல ஆயத்தமானள். சிறிது நேரத்தின் பின் விமலா தனது காரிலும், கமலா நடந்தும் பாடசாலையை அடைந்தனர். பாடசாலை ஆரம்பமானது. முதலாம் பாடம் இருவரையும் கடற்கரைக் காட்சியை வரை யும்படி ஆசிரியர் கூறினர். கமலா வரையத் தொடங்கினள், ஆனல் விமலாவோ படம் வரையாது வரைவதுபோல் நடித்தாள். ஆசி ரியர் படங்களைத் தரும்படி கேட்டபோது

தான் ஏற்கனவே வீட்டில் வரைவித்த படத்தை கொடுத்தாள். இருவரது படமும் நன்ருக இருப்பது கண்டு கமலாவையும் விமலாவையும் பொருட்காட்சிக்கு தேர்ந்தெடுத்தார். அடுத்தநாள் பொருட்காட்சி நடைபெறப் போவதாகவும் கூறினர்.

வீட்டிற்குச் சென்ற விமலா தான் தேர்ந்தெடுக்கப்பட்டதையும், கமலாவும் தேர்ந்து எடுக்கப்பட்டதையும் கூறினுள். கமலாவை எப்படியாவது போட்டியில் பங்குபற்றச் செய்யக்கூடாதெனவும் திட்டம் தீட்டினுள் அதன்படி அடுத்தநாள் பாடசாலை செல்லும்போது விமலா கமலா சென்ற பாதை அருகே இருந்த சேற்றை தனது கார் ஓட்டுபவரிடம் கூறி அவள்மீது படும்படி செய்தாள். அவ்வாறு செய்ததால் கமலா வீட்டுக்குச் சென்று உடைமாற்றச் சென்ருள்.

அவள் திரும்பிச்செல்வதைக்கண்ட விமலா தான் பரிசு பெறுவாளென நினைத்து மகிழ்ந்தபடி சென்றுகொண்டிருக்கும் போது வேகமாக வந்த லொறி ஒன்று அவளது காரோடு மோதுண்டது. அதனுல் விமலா காயப்பட்டு மயக்கமுற்ருள் அதன்பின் அவள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள்.

## ★ அர்ச்சுனுவே! நீ வாழ்க! ★

வில்லுக்கோர் அர்ச்சுனு என்றல்
சொல்லுக்கும் ஓர் அர்ச்சுனு உள்ளான்
சோடைபோகாமல் அரிய கருத்துக்கள்
சிந்தனைகள், சிறுகதைகள் விளம்பரங்கள்
கவிதை, ஓவியம் சிறுதுணுக்கு
என்றெல்லாம் சிறுவர்க்காக்கி
சிந்தனைக்கமுது படைத்திடும்
சிறுவர் சஞ்சிகை அர்ச்சுனுவே!
நீ வளர்க! வாழ்க! பல்லாண்டு.

பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம்
(திருகோணமலை)

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வியக்க ....

திடீரென ஒரு ஒளிர்பொருள் தோன்றுகின்றது பூமியிலிருந்து 3000 அடியில் அது இருக்கலாம் எனக் கணிக்கப்பட்டது. தோன்றிய அது மீண்டும் மறைந்துவிட்டது.

கமெராவில் அதுபதிவாகி விட்டது 23,000 பிரேம்களில் பறக்கும் ஒளிர்பொருளை இதனை வைத்து டாக்டர் முகாபீ ஆராய்வில் இறங்கிவிட்டார் கம்ப்யூட்டர் துல்லியமான பல முடிவுகளை முகாவீக்குதந்தது.

அதன் வடிவம் சைக்கிள் பெல் வடிவானது. நிறம் மஞ்சள் வெள்ளை சிவப்பு நிறங்களில் ஒளிர்ந்தது.

அதன் வெளிச்சத்தின் சக்தி 10'0000 வாட்ஸ் வேகம் மணிக்கு 3000 மைல்களாகும். இதனைப் பற்றியாரும் ஆய்வுகளில் இறங்கி முடிவுகளை வெளியிட்டால் அமெரிக்க நாலா விஞ்ஞானிகள் ஏதாவது ஒருகுறை சொல்வார்கள்.

ஆனுல் இதுபற்றி அவர்கள் எதுவுமே கூறவில்லை.

சிலநாடுகளில் வானிலுள்ள மேகங்கள் தட்டுகள்போல் தோற்றுவதுண்டு. பலர் இதனை பறக்கும் தட்டுகள் எனக் கூறினர். ஆனுல் இது இயற்கையின் இயல்பு இதனை வைத்து பல நாட்டு விஞ்ஞானிகள் உலகில் தோன்றும் அனைத்து வஸ்துகளும் இயற்கையின் இயல்புகளே என வாதிடுகின்றனர்

ஆனுல் எல்லாம் இயற்கையின் இயல்புகளல்ல விமானத்தின் மேலே சுற்றிவிட்டு கடலில் சென்று மறைவதெல்லாம் இயற்கையின் இயலபுகளா?

பல மனிதர்களைக் கடத்திச் சென்றது பொய்யா? இவ்வாறு பல வாதங்கள்.

## வெள்ளைப்பசு

வெள்ளை நிறத்தது எங்கள்பசு
வீட்டில் வளர்ப்பது அந்தப்பசு
புள்ளிக் கன்றது போட்டபசு
துள்ளி ஓடிடும் அந்தக்கன்று

சங்கு மணியொலி சலசலென
தாய்ப்பசு மெல்ல அசைந்துவரும்
பொங்கு குடம்போல் மடிசுரக்க
புதிய கன்றினைக் கதறிவரும்

பாலும் நெய்யோடு மோருந்தரும்
பஞ்ச கௌவியம் யாவுந்தரும்
மேலும் மெழுகிடச் சாணிதரும்
வேண்டிப் பயிர்செய எருவுந்தரும்

**சேந்தன்**

(27 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழித்து எழுந்தவனை நோக்கி சப் – இன்ஸ்பெக்டர் கேட்டு நிறுத்தினர்.

திடீரென தூக்கத்தில் இருந்து எழுந்தவனுக்கு அவர்களைப் பார்த்ததும் ஒன்றுமே விளங்கவில்லை. ‘திருடனுக்கு நம்மளை எல்லாம் பார்த்தா புதுசாத்தானே இருக்கும்’ என்றார் ஒரு பொலீஸ்காரர்.

‘போதுமடா உன் நடிப்பு உம்... எழுந்திரு... எழுந்திரு நடையைக் கட்டு’ என்றார் மற்றொரு பொலிஸ்காரர்.

‘இன்னும் ஏம்ப்பா லேட் பண்றீங்க அவன் எழுந்துக்கிலேண்டா, தூக்கி வண்டியிலே போடுங்க’ என்றார் இன்ஸ்பெக்டர்.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கண்ட டெரிலின் சட்டைக்கு என்ன பேசுவதென்று புரியவில்லை சற்று நேரத்துக்கெல்லாம் டெரிலின் சட்டையின் ஆசாமியை பொலிஸ் வண்டியிலே ஏற்றிச்சென்றார்கள். ஏற்றிச் செல்லும்பொழுது அந்த டெரிலின் சட்டையையும் எடுத்து சென்றார்கள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த சாதாரண சட்டைக்கு எல்லாம் புரியலாஎது சாதாரண சட்டையை அழுக்கோடு அணிந்து செல்லும் ஏழை எழுத்தாளன் சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த அறைக்குள் நுழைந்தார். நீண்ட நாட்களாக அழுக்கோடு கிடந்த அந்தச் சட்டையை குழாயடிக்குகொண்டுபோனார்.

கையிலிருந்த சோப்பால் சட்டையின் அழுக்கை அகற்றினார். நான்கைந்து முறை அந்த சட்டையை துவைத்தார் சட்டைக்கு பாரமாய் இருந்த அழுக்கு நீங்கியது. சட்டை தூயநிலை அடைந்தது.

அந்த சட்டையை கயிற்றின்மீது உலர்த்தினான். சிறிது நேரத்திற்கெல்லாம் உலர்ந்துவிட்டது. பின் அதைஅணிந்து கொண்ட எழுத்தாளன்‘ அவன் அறை நண்பன் டெரிலின் சட்டை ஆசாமியைப் பார்ப்பதற்கு சிறைச்சாலை நோக்கிப் புறப்பட்டான்.

சிறையில் அந்த ஆசாமியை கண்டு பேசித் திரும்பினான். வரும் வழியில் சிறை பாதுகாவலர் அறை சேந்தாற் போல் இருந்த அறையில் அந்த டெரிலின்சட்டை தொங்கிக்கொண்டிருந்தது. வெள்ளைச் சட்டையைப் பார்த்ததும் டெரிலின்சட்டை தலை குனிந்தது.


அப்போது சாதாரணச் சட்டை, ‘என்ன அண்ணே சௌக்கியம்தானா?’ எனக் கேட்டது.

என்னை மன்னிச்சிடப்பா· திமிரிலே உன்னை என்னென்னவோ பேசிட்டேன். சட்டையிலே இருக்கிற அழுக்கை சோப்பும் தண்ணீரும் போக்கிடும். ஆனால் அவங்கவங்க மனசில் இருக்கிற அழுக்கை அவங்கவங்களாலே தான் போக்கிட முடியும்.

‘இத்தனை நாளுக்குப் பிறகு இப்பதானா உண்மை உனக்கு புரிந்தது? இதைப் பார்த்துத் தான் வள்ளுவர் பாடினார்:–

‘புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்’

★



கடந்த மார்ச் மாத திங்கள் இதழ் 'அர்ச்சுனு'' படித்தேன். அதில் 'வியக்க வைக்கும் பறக்கும் தட்டு' என்னைப் பெரிதும் கவர்ந்தது. இதற்கு எனது பாராட்டுக்கள் உரித்தாகுக. இதைப் போல பல சிறுவர் தொடர்கதைகளை பிரசுரிக்குமாறு வேண்டு கின்றேன்.

**வெ. யூடாசதீஸ் குமார்**

சாள்ஸ் மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம்

வாசிப்பதால் மனிதன் பூரணம் அடை கிறுன். அர்ச்சுனுவை வெளிவிடுவதால் நாம் பயன் அடைகிறேம் பாடசாலையில் கட்டுரை எழுவதற்கு பெரும் உதவியாக இருக்கிறது இதனுல் இதனை தொடர்ந்து வெளிவிட வேண்டும்.

**து. துசியந்தன்**

உரும்பிராய்,
இந்துக்கல்லூரி.

''துப்பறியும் சிங்கங்கள்'' வாசித்தேன் எனக்கு மெய்சிலிர்த்தது. லப்பாம், டப்பாம் என்னும் இருவர் செய்த குறும்புத்தனத்தால் ஊரையே கொள்ளை அடிக்கும் திருடனை பிடித்து விட்டார்கள். இதனை எழுதிய வில் வம் பசுபதி அவர்களுக்கும் இதனை வெளி யிட்ட ''அர்ச்சுனு''வுக்கும் எனது பாராட் டுக்கள்.

**செல்வன் பி. ரூபேந்திரன்**

பளை மகாவித்தியாலயம்

மாணவர் சஞ்சிகையான ''அர்ச்சுனு விலே சிறுவர் நூலகம்'' எனும் புதுப் பகுதி தொடங்கியதை இட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறேம் இதன் மூலம் மாண வர்களையும் நூலாசிரியர்களையும் ஊக்குவிக்க லாம்.

அர்ச்சுனுவில் வரும் கதை கவிதை கட் டுரைகள் அனைத்தும் வெகு ஜோர்

**யோகா - சேந்தன்**

யாழ் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்

மாணவராகிய எமக்கு அர்ச்சுனு பல விடயங்களைத் தருகிறது மாணவர் ஆக்கங் களை வெளியிட்டால் மாணவர்கள் தாமும் கவிதை கட்டுரை அட்டைப்படங்கள் என்ப வற்றில் மிகுந்த அக்கறை செலுத்தியுள் ளார் இதனுல் பலர் வருங்காலத்தில் கவி ஞராகவோ எழுத்தாளராகவோவர அர்ச்சுனு வழிவகுக்கின்றது.

**செல்வன் மு. லிங்கேஸ்வரன்**

அத்தியார் இந்துக்கல்லூரி
நீர்வேலி

ஹாட்லிக் கல்லூரியில் எட்டாம் ஆண்டு A பிரிவில் கல்வி கற்கும் மாணவனுகிய நான் அர்ச்சுனுவை விரும்பி வாங்கிப் படிக்கிறேன் என் நண்பர்களும் அர்ச்சுனுவை வாசித்துப் பயன்பெறுமாறு வேண்டிக்கொள்வேன். ஒவ் வொரு இதழையும் ஆவலோடு எதிர்பார்த் துக்கொண்டிருப்போம்.

**நாகரத்தினம் சிவச்செல்வன்**

2ம் குறுக்குத்தெரு
பருத்தித்துறை
ஆசிரியர்

மாதந்தோறும் பல விடயங்களை தாங்கி வரும் அர்ச்சுனு எமது கைகளில் தவழும் போது ஏற்படும் பெருமைக்கும் பூரிப்பிற்கும் அளவேயில்லை. தமிழ் நாட்டில் பல சிறுவர் மலர்கள் வருவது போல ஈழத்திலும் இத் தனை சிறப்பு மிக்க அர்ச்சுனு வருவதையிட்டு மகிழ்கின்றேம்.

**நி. டிவகலால**

யாழ்/ இந்துக்கல்லூரி
ஆண்டு 9

(31ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றான் டப்பாம். சைக்கிளில் வந்தவன் திடீரென இறங்கி, சைக்கிளை வேலியில் சாத்தி விட்டு வேலியோரம் இருந்த கள்ளுக்கடைக்குள் போனான்.

சைக்கிளுக்கு அருகில் வந்த இருவரும் சைக்கிளை ஆசையோடு பார்த்தார்கள். கொழும்பு மாமா தங்களுக்குக் கொண்டுவந்த சைக்கிள் என நினைத்தார்கள்.

வேலியில் சாத்தப்பட்டிருந்த சைக்கிளை டப்பாம் எடுத்தான். லப்பாம் சீற்றில் ஏறிக் குந்தினான். உடனே டப்பாம் சைக்கிளைத் தள்ளினான்.

கள்ளுக் குடித்துவிட்டு வெளியே வந்தவன் சைக்கிளைக் காணாது திகைத்தான். பின்பு வீதியைப் பார்த்தான். தனது சைக்கிளை இருவர் கடத்திப்போவதைக் கண்டான். அவனுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. கள்ளும் வேலை செய்தது. 'டேய்' என்று உரக்கக் கத்தியபடி துரத்தினான்.

திரும்பிப் பார்த்த டப்பாம் பயத்தினால் உடல்நடுங்க, வேகமாகத் தள்ளினான். சைக்கிள் மெயின் றோட்டில் ஏறியபோது அங்கு வந்த பொலிஸ்காரர் மேல் மோதியது. பொலிசைக் கண்ட கறுப்புச்சட்டை துரத்துவதை விட்டுவிட்டுத் திரும்ப ஓடினான்.

அவனைக் கண்ட பொலிஸ் அவனைத் துரத்தியது. மதுபோதையில் இருந்த அவனால் ஓட முடியவில்லை. அவனை மடக்கிப் பிடித்த பொலிஸ் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார். பல நாட்களாகத் தேடப்பட்டு வந்த சைக்கிள் திருடன் லப்பாம் டப்பாம் ஓட்டி வந்த சைக்கிள்கூட அன்று காலையில் கறுப்புச் சட்டைக்காரனால் திருடப்பட்டது.

திருட்டுச் சைக்கிள் என்று தெரிந்தே லப்பாம் டப்பாம் அதை எடுத்ததாக பொலிஸ்காரர் நினைத்தார்.

நடந்ததற்றை பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு கூறியபோது லம்பாம் டப்பாம் இருவரையும் வெகுவாகப் பாராட்டினார்.

இவர் ஏன் தங்களைப் பாராட்டுகிறார் என்று தெரியாத இருவரும் அசடு வழியச் சிரித்தனர். ★

# மழையே மழையே விரைந்து வா

மழையே மழையே விரைந்து வா!
மண்ணில் ஓடி மகிழ வா!
தழையும் பயிர்கள் செழிக்கவே
தாய்போல் உலகை வளர்க்கவே
மழையே மழையே விரைந்து வா ......

குட்டை குளங்கள் நிரம்பவே
கொடியில் பூக்கள் குலுங்கவே
பசும்புல் நன்றாய் முளைக்கவே
பாரும் நல்லாய் செழிக்கவே
மழையே மழையே விரைந்து வா ......

ஆற்றில் வெள்ளம் பெருகவே
அடரும் காடு செழிக்கவே
காற்றில் புதுமை கலக்கவே
காயும் வெப்பம் தணியவே
மழையே மழையே விரைந்து வா ......

செல்வி. ப. சுபாங்கினி
உறுப்புரிமை எண் 21
உடுவில் முருகமூர்த்திவித்தியாசாலை

# கற்றிடுவோம்

இளமையிற் கல்விதனை
இதமுடனே கற்றிடுவோம்!
எதிர்கால வாழ்விற்காய்
ஏற்றிடுவோம் அறிவொளியை!
பணிவான நடத்தைகளை
பள்ளியிலே கற்றிடுவோம்!
பண்போடு வாழ்க்கையிலே
பலகாலம் வாழ்ந்திடுவோம்!
இனிதான வாழ்வமைக்க
இன்றேநாம் கற்றிடுவோம்!
ஒளிர்கின்ற நம்வாழ்க்கை
ஓங்கிடவே கற்றிடுவோம்.

செல்வன் ஐ. குமரதாசன்
(யாழ்/கனகரட்ணம் ம. ம. வி.)

# ஞானக்கதிர்

## இந்து சமய மாத மஞ்சரி

சமய அடியார்கள், சமய ஞானிகள், ஆர்வலா கள் ஆவலுடன் எதிர்பார்த்த இந்து சமய மாத மஞ்சரி!

இந்து சமய அறிவொளி பரப்ப எழுந்து வந் துள்ளது.

### விரைந்து வாங்குங்கள்

உதயன் விற்பனை முகவர்களிடம் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபா 5/-

ஆண்டுச் சந்தா ரூபா 70/-

ஆண்டுச் சந்தாவை காசோலை அல்லது காசுக்கட்டளை மூலம்'' நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்'' என்று எழுதி அனுப்பினல் அஞ்சல் மூலம் மாதந் தோறும் பெறலாம்.

ஈழத்து ஆலயங்களின் பெருமைகள், ஞானிகளின் வரலாறுகள் அற்புதங்களை அறிவதற்கு தவருது படியுங்கள் ஞானக்கதிர்.

ஞானக்கதிர் பணிமனை,
15, 2வது ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

முகாமையாளர்,
எஸ். ஜி. சி. டேம்,
61, பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு 4.


இச்சிறுவர் இலக்கியத் திங்களிதழ் நியூ உதயன், பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபன தாரால் 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதியில் உள்ள அவர்களது அச்சகத்தில் வெளியிடப்பட்டது.

## ...ய கவனியுங்கள்!

...ப்ரு'வின்

★ ...த சேமிப்புத் திட்டம்

★ ... குழந்தை வளரும் போ... உங்கள் சேமிப்பு ...பதை உறுதி செய்யும் ...

★ ...ந்தம் சிறு தொகை ...ந்து குறுகிய காலத்தில் ...நிதி பெறும் திட்டம்

★ உழைக்கும் போதே சேமிக்கும் திட்டம்.



## இன்றே நாடுங்கள்

| ரூபா | 1 வருடம் 12% | 2 வருடங்கள் 14% | 3 வருடங்கள் 16% |
|---|---|---|---|
| 100/= | 1,280.93 | 2,783.41 | 4,643.27 |
| 200/= | 2,561.86 | 5,566.82 | 9,286.54 |
| 300/= | 3,842.79 | 8,350.23 | 13,929.81 |
| 400/= | 5,123.72 | 11,133.64 | 18,573.08 |
| 500/= | 6,404.65 | 13,917.05 | 23,216.35 |
| 600/= | 7,685.58 | 16,700.46 | 27,859.62 |
| 700/= | 8,966.51 | 19,483.87 | 32,502.89 |
| 800/= | 10,247.44 | 22,267.28 | 37,146.16 |
| 900/= | 11,528.37 | 25,050.69 | 41,789.43 |
| 1000/= | 12,809.30 | 27,834.10 | 46,432.70 |

## ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி: 589310, 500576.

207, மின்ச... நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.